உ.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# பஞ்சீகரண பௌதிக விவேக விளக்கம்.

இது

ஸ்ரீ சிவசங்கரனார் உமாமகேஸ்வரிக்கு அருளிச்செய்த

**சிவஞானமும், பஞ்சபௌதிக அத்யாய உடற்கூறும்**

ஸ்ரீ ஆதி சங்கராசாரிய சுவாமிகளால் அருளிச்செய்த

**மகாவாக்கியப்பிரகரணமும்**

அடங்கப்பெற்றது.


**ஸ்ரீமதி பெங்களூர் - நாகரத்தினம்மாள்**

அவர்களால் இயற்றப்பட்டு,


காசிவாசி ஞானானந்த சொரூபராகிய ஸக்தியானந்த சுவாமியவர்கள்

சிஷ்யராகிய

பராம்பரசிவயோகித் திருவடித் தொண்டரான

தியாகராஜ சிவயோகிகளால்

பரிசோதித்து.


சென்னை கணேச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

---

1917.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

# பஞ்சீகரண பௌதிக விவேக விளக்கம்.

இது

ஸ்ரீ சிவசங்கரனார் உமாமஹேஸ்வரிக்கு அருளிச்செய்த

**சிவஞானமும், பஞ்சபௌதிக அந்நிய உடற்கூறும்**

ஸ்ரீ ஆதிசங்கராசார்ய சுவாமிகளால் அருளிச்செய்த

**மகாவாக்கியப்பிரகரணமும்**

அடங்கப்பெற்றது.

ஸ்ரீமத் பெங்களூர் நாகரத்னம்மாள்

இவர்களால் [illegible]

காசிவாசி ஞானானந்த சௌபாக்ய வித்தியானந்த சுவாமியவர்கள்

சிஷ்யரான

ஏகாம்பரசிவயோகிக்கு திருவருத்த தொண்டரான

தியாகராஜ சிவயோகிகளால்

பரிசோதித்தது.

சென்னை கணேச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1917

# விளம்பரம்,

இப்புத்தகம் வேண்டுவோர்கள் சென்னைப்பட்டணம் பெத்து நாய்க்கன்பேட்டை மின்டு போஸ்டு ஆபீசுக்கு அடுத்த ஸ்ரீநிவாசஐயர் வீதி 7-வது நெம்பர் வீட்டிலும், புரசைப்பாக்கம் அரசப்பமுதலி வீதி 13-வது நெ வீட்டிலும், சூளை பஜார்சாலை கணேச அச்சுக்கூடத்திலும் அணா 4 - கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

வெளிதேசத்திலுள்ளோர் புத்தகம் ஒன்றுக்கு 5 - அணா மதிப்புள்ள போஸ்டு லேபில் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

மொத்தமாய் வாங்குவோர்க்கு 10 - க்கு ஒன்று இனமாகக் கொடுக்கப்படும்.

உ

ஸ்ரீ சற்குரு பாதந்துணை.

# சிறப்புப்பாயிரம்.

இது

## தியாகராஜ சிவயோகியார்

இயற்றியது.

நேரிசையாசிரியப்பா.

நான்முகன் முதலா நலந்திகழ் மூவரும்
வானவர் குழுவனு மறைகளு முறையிடப்
பூரண கருணையிற் பொலி திருவுருவாய்
மானிடத் தவர்க்கு மாட்சிமைப் பெருமை
சிறுமையு மாரணப் பிறப்பறும் வகையினை
அருள்செய வேண்டி யுலகநீள் வடிவை
ஒருபொருட் டன்றிப் பலபல வகையாய்ப்
படைத்தவை யென்னை என்றெனச் சத்தி
என்றென முறையிட வாங்கவ னருள்செய
அரனருள் புரிந்துந் தத்துவ ஞான
பாஞ்ச பௌதீக விளக்கம துடனே
சுகக்கடல் வடிவாய்ச் சுகத்தினை யளிக்கும்
ஜகத்குரு சங்கரா சாரிய சுவாமிகள்
மயக்கற நாட்டிய மகா வாக்கியமே
மாதவ பூருவ மனுநீதி யின்முறை
வழங்கிய சொற்படி வேதவே தாந்த
சாஸ்த்ரசித் தாந்த முறையாய்ச் சரியை
கிரியா யோக ஞானநூ லுணர்ந்த
வித்தக னருளால் தத்துவ முணர்ந்து
மித்தையா முடல மென்றெனத் தேர்ந்து
ஆதியாந் தேகந் தேகாபி மானந்
துணைவியா யிருவ ரீரெட்டு வருடம்
வளர்த்தியமக்களைக்
காவல்கொண் டிருப்பது கவலையா யுணர்ந்து
அன்னிய ரிருவர்க் கன்னிகா தான
மணமது செய்து மகற்றிய பின்பே
ஆசையை யொழித்தே யாத்திரை மயமாய்

ஆண்டருள் திவ்ய தேசங் களுள்ள
மகாலய சிவாலய மகாவிஷ்ணு வாலயம்
வழிபடு வண்ணமு மவ்வவ் விடங்களில்
நற்கா லங்களி லருச்சனை யாதிகள்
ஆகியா நலமும் வயங்கிடு செய்கையும்
ஏழையா மன்னிய வாலிப மெவ்வண
பருவமாம் பிள்ளைகட் கல்வியா முதவியில்
சம்பள வகையும்
அன்னதா னங்களு மன்புடன் செய்யுமா
சாந்த குணமும் சாருநற் பக்தியும்
சதாகா லமுமே சிரவண முதலா
மனன நிதித்யா மார்க்க மறிந்து
மணமிரு தன்னை மதிக்தோர் மதிக்க
மாசபை தன்னில் வாணியின் துணையால்
பிடிலுமிரு தங்கமும் பின்னிட் டோட
சுகமுங் குயிலும் சூழ்ந்தெதிர் கொள்ள
சாரீர சங்கீத சம்பத்தைப் பெற்ற
மக்க ளெவரென மாவித்து வான்கள்
கூடியசபையில்
மைசூ ராதி மலையாள நாட்டின்
ராஜ ராஜாக்கள் ராஜ பூபதிகள்
ஆசிகள் கூறி வாசமா யுள்ள
நித்தியா னந்த சங்கீத வித்யா
சுந்தரி யென்னும் பெயரு மத்துடன்
தங்க மெடல்களுந் தக்க தோடாக்களும்
தரப்பெற் றிலங்கும் தகைமைக் கேற்ப
நாமமும் வகித்த ஸ்ரீமதி பெங்களூர்
நாகரத் தினமெனு நங்கைநல்லாள்
இயற்று மிந்நூல் இளம்பிறை
யொப்பநின் றோங்கி யுலகில் வாழியவே.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# பஞ்சீகரண பௌதிக
# விவேக விளக்கம்.

## விநாயகர் துதி.

திருவுங் கல்வியுஞ் சீருந் தழைக்கவுங்
கருணை பூக்கவுந் தீமையைக் காக்கவும்
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் போற்றுவாம்.

## சுப்பிரமணியர் துதி.

பன்னிரு கரத்தாய் போற்றி பசும்பொன்மா மயிலா போற்றி
முன்னிய கருணை யாறு முகப்பரம் பொருளே போற்றி
கன்னிய ரிருவர் நீங்காக் கருணைவா ரிதியே போற்றி
யென்னிரு ளகல வேண்டி விந்நூலிற் கருள்வாய் போற்றி.

## தக்ஷணாமூர்த்தி துதி.

அன்று நால்வருக் கொளி நெறி காட்டிய நின் கருணையு
மன்று முக்கணுங் கால கண்டமும் வயங்கிய தேவ தேவே
என்னுட் டங்கிய விருளைத் துறத்தி னின் கருணை வைத்திடவே
பன்னிய பஞ்சீ கரண விளக்க மியற்றிடும் பேருரைக் கருள்வாய்.

## கடவுள்வணக்கம்.

அண்டங்க ளெல்லா மணுவாக வணுக்க ளெல்லாம்
அண்டங்க ளாகப் பெரிதாய் சிறிதாயி னானும்
அண்டங்க ளுள்ளும் புறம்புங் கரியாயி னானும்
அண்டங்க ளீன்றுடன் துணையென்ப ரறிந்த நல்லோர்.

## சிவசத்தி முதலியோர் வணக்கம்.

அகிலசகன் நாயகனை யனந்த சத்தி
யமைவுற்ற வகண்டசிவன் சரணம் போற்றி
நிகிலசகன் மாதாவாய் நித்தியா னந்த
நிசவடிவா யம்பிகையின் சரணம் போற்றி
சகலவித விக்கினமுந் தீர்த்தெல் லோர்க்குஞ்
சாதகமாம் விநாயகனற் சரணம் போற்றி
தகைமைமிகு அன்பர்க்குச் சிவஞா னத்தைத்
தந்தருளுஞ் சண்முகனற் சரணம் போற்றி

## இராஜராஜேஸ்வரி துதி.

அமலபஞ்ச கிருத்தியங்க ளடைத்துமதற் காதரவு மாகினளை
விமலருளத் தகலாளை யெனையோர்பொரு ளாயாண்ட விஞ்சையாளை
நிமலராஜ ராஜேஸ்வரி நாயகியை நிமலைதனை பதம்பணிய
முமலவிருட் கிரவியையென் கண்மணியை முப்போதும் பணிந்திடுவோம்.

## இலட்சுமி துதி.

சங்கு சக்ரா யுதத்தைத் தாங்கிய மாயோன் மார்பிற்
தங்கியே யுலகத் தோர்க்குத் தாழ்விலா வாழ்க்கை நல்கும்
பங்கஜ வதனை மொத்த பகர்செல்வி பாத மேத்தி
யிங்கித பஞ்சீ கரண பௌதிக விளக்க மருள்வாம்.

## சரஸ்வதி துதி.

தாவரு முலகெலாந் தந்த நான்முகத்
தேவுதன் துணைவியாய்ச் செறிந்தபல் லுயிர்முன்
நாவதோ றிருந்திடும் நலங்கொள் வாணிதன்
பூவடி மலர்மிசைப் புனைந்து போற்றுவாம்.

## நந்திதேவர் துதி

ஐயிரு புராணநூ லமரர்க் கோதியுஞ்
செய்யமன் மறைகளுந் தெரிந்து மாயையான்
மெய்யருள் சூள்புகல் வியாத னீட்டிய
கையடு நந்திதன் கழல்கள் போற்றுவாம்.

# பஞ்சீகரண பௌதிக விவேக விளக்கம்.

## தொண்டர்கள் துதி.

அண்டரு நான்முகத் தாதையு மியாவருங்
கண்டிட வரியதோர் காட்சிக் கண்டவர்
யெண்டகு மடியவ ரேத்தி வாழ்திருத்
தொண்டர்தம பதமலர்த் தொழுது போற்றுவாம்.

## குருவணக்கம்.

ஊழை யொதுக்கி யொருசொல்லா லானந்த
வாழ்வைப் பெருக்கி மலசன்ம மாயையற
வாழ்விய குடியேறப் பரமசுக மெனக்களித்தோன்
வாழிநெடுங் காலமு மாறுமுகா சருள்புரிகவே.

இதுவுமது

பூலோகமதனிலே தாமபார்த்தபாரதியாய்ப்புருடப்பெறுமாறுநோக்கிப்
புனிததத்துவததிலுல்லருவியாசமுனி பொருந்துபஞ் சாமலைகளெல்லாஞ்
சாலோக சாமீப சாரூப சாயுச்சியமாம்பதமொக்கத்து மேன்மையாக
தநயனுஞ் சுகர்தனக் கினியதாய்ப்போதித்தசுக்கரதுசுருதிசாரம்
மேலோகமறியாத வண்ணமாறு லுக்குமேதினியில் வெளிபுருமய்ய
மேன்மைமிகு சிவரகசிய மாதிநூலதனி லுபதேசமையமேற்கோளுடன்
கோலமாயிந்தவென் னடிமைகாணடாண்டவன் குருநாதனைப் பணிகுவாம்.

## வாழி விருத்தம்.

விண்ணொடு மண்ணுளோர் வேந்தர்களும் வாழி
வேதாந்த வேதியர்கள் மெய்த்தவரும் வாழி
பொன்னுரி கலைமகளோர் புனைகவிதரும் வாழி
புலவர்முதற் சுலோகர் புராணங்க ளுடன் வாழி
யென்னுரு மிடைவிடாப் பத்திபணி புரியுநரு
மவத்தினி லுதித்த மாபுண்ணியரும் வாழி
தன்னிகரிற் சதுர்வேத சித்தாந்த மையுஞ்
சாந்த சைவ வைணவ வேதாந்தசமம வாழியே.

## அவையடக்கம்.

ஆலவிடஞ் சிவன்மிடற்றி லடைசினதா லகிலமெலா
மாலவிடமென் றிகழா ரஞ்சலி செய்வார் போல
மூலமகா வாக்கியமா மணிச்சீரை முடித்திடுக
மூலமறிந்தோ ரிகழா ரதுவேயென் மொழியாமால்.

## இதுவுமது.

விரிந்த நீரையுடைய சமுத்திரக்கரை யடைந்த ஓர் சுணங்கன் அந்நீரை முழுவதுங்குடிக்க விரும்புகின்ற புத்திக்குச் சமானத்தன்மையுள்ள ஏழை யடியாள் இப் பஞ்சீகரண பௌதிக விவேக விளக்கமெனு நூலை, ஐவிதவிலக்கணங்களையுணர்ந்த நவரச வலங்காரசெய்யுள் புனைய வல்லவருக்கு முன் இந்நூல்; பெருமையான வேதமுதலிய அறுபத்துநான்கு கலைகளையும் அதின்முடிவான வேதாந்தார்த்தத்தை ஆச்சாரியசுவாமிகள் அநுக்கிரத்தபடி யெழுதிய வனுபவத்தை முமுக்ஷுக்களாகிய பண்டிதபாமரர்க ளியாவரு முணருமாறு கருணைமிகுதியாலிதை வெளியிட்டு வந்தனத்துடன் மகான்களைக் கேட்டுக்கொள்வது; கூடியவரையில் இதிலெழுதிய மெல்லியசொற்களாயினும் வெற்றுரையாயினும் புன்சொற்களாயினும் பரப்பிரமத்தின் பொருளைப் பெறுகின்ற மேன்மையோர் சொற்குற்றம் பொருட்குற்ற மிருப்பினுங் குற்றங்களைந்து குணத்தைக் கொள்ளுந் தூய்மையுடையோர் நீரைநீக்கிப் பாலுண்டனம்போல் மேலானபொருளைமாத்திரம் சாதுக்கள் அங்கீகரிப்பவரென்று அடியார்க்கடியாள் வினையமாய்நமஸ்கரித்து கேட்டுக்கொள்ளும்

பெங்களூர் - நாகரத்தினம்.

## பாயிரம்.

அண்டமார் புவனத் தனைத் துயிர்க்குயிரா
யவாங்கமனோ கோசரவமலன்
தொண்டர்பா லிரங்கிச் சதாசிவ வடிவாய்த்
தோன்றியும் பின்னரச்சிவமே
பண்டுமா விருடிகட்கருளிய சூதன் பன்னிய
வேதத்தின் பொருளை
மொண்டுவப் பொழியா துணர்ந்தடியார்க
ளுய்ய வீதுரைக்க திவ்வுரையே.

பரவியபரமன் கருணையேவடிவாய்க் கறந்தஞானந்த வாரிதியை
புரிந்த போதங்க ளெலாம் பரந்தக ளுலகெங்களீன்று
றிமகட் குபதேசித்தக் கேள்வியைப் புகலலுற்றேம்
தெரியவிக்கதையைக் கேட்போர் சிவகதி யடைவர்தாமே.

## நூல்.

ஓர்காலத்தில் கயிலையங்கிரியில் ஆத்மாக்களை முத்தியிலே விட வேண்டி வாக்குமனாதீத கோசரவருட்சக்தியாகிய உமாமயேஸ்வரி தானே சீவர்களிடம் காருணியாய், பரமகருணா நிதியாகிய பரமசிவத்தைநோக்கி, சுவாமி! பூமியின்கண் நற்கதியடைபவ ரின்னரென்றும் துற்கதியடைபவ ரின்னரென்று அனுக்கிரகஞ்செய்ய வேண்டுமெனக்கேட்கப் பரமசிவனார் அவைகளை அருள்செய்யத்தொடங்கினார்.

ஓ கோமளவல்லி! நீ கேட்ட கேள்வி உலகவியாபாரமான விஷயமே:—அதாவது நற்குண நற்செய்கையுடன அன்னதான தருமம்; பரவுபகாரம் மறவாமல், சொன்னசொற்றவறாமல் சத்தியங்குன்றாமல், ஞாயந்தப்பாமல், பிறருக்கொருகேடு நினையாமல், உயிர்வதையும் உண்ணமலும் ஊராருடைமைக்கு பேயாய்த் திரியாமல், ஏழைகளை யெதிரிடாமல், வந்தவிருந்தினை யெரிந்து விழாமல், சிவகாருண்ணியந் தவறாமல் விசேஷகால விரதங்களையும், பிதுர்தர்ப்பணாதிகளையும் மறவாமல், ஆசிரியனுக்கு பிழைசெய்யாமல், ஒரேசருதியாய் கோபத்தை நீக்கி சாத்மீக குணத்தன யினியவார்த்தையும் யீஸ்வரபக்தியும், காம நிவர்த்தியும், ஒழுக்கமுடன் மனதை சுத்தமாக வைத்திருப்பவர்கள் யெவர்களோ அவர்கள் மேலான சனனமும், செல்வமிகுந்து சனக்கட்டும், புகழுடன் சொற்சோர்வின்றி குளிர்ந்தமனதுடன் ஆயுள் விருத்தியாய் நற்கதியெத்தனையோ அத்தனையும் பெற்று நோயற்று வாழ்வுற்றிருப்பார்கள்.

நற்குண நற்செய்கையில்லாத தீநெறியுடையவர்கள் நிந்தை வெறுப்பு, செருக்கு, பொய், அசத்தியம், கோபம், அல்ப்பத்தின் மீதாசை துஷ்டருறவு, கொலை, புலை, களவு, கட்காமம், பரதாரகமனம், நயவஞ்சகம், மோசங்கபடம், பெரியோர்நிந்தை பொறாமை, தேவ தூஷணை, குருநிந்தை, நன்றிமறத்தல், தந்தைதாய் மனநோகச் செய்து நிந்தையுடன் வாழ்தல், பிதுர்கர்மம் பூச்சியம்பண்ணல், பசு வையுதைத்தல், அடித்தல் கன்றுக்குப் பால்தராவிடல், ஸ்திரி, சிசு பசு ஹத்தி, வேதாகமபுராண மதநிந்தை இப்படிப்பட்ட துர்க்குணமுடையவர்கள் எவர்களோ அவர்களுக்கு இழிவான ஜனனமும் தாரித்திர முமம் அங்கவீனமுதலாய நோய்களால் நலிந்து ஆயுள்குறைந்து பொல்லாங்கான காரியம் எவ்வளவோ அவ்வளவும் அதனோடு நரகமும் அனுபவிப்பார்கள். ஆகையால் இவர்களுடைய பாவபுண்ணியத்திற்குத் தக்கபடி நொண்டு முடம், குருடு ஊமை முதலான ஜனனமுண்டாகின் றன. இதுதான் பிராரத்த கர்மமென்று சாஸ்திரங்கள் சொல்லும்.

அவரவர் வினையி னவரவர் வருவ ரவரவர் வினையள வுக்கே
அவரவர் போக மென்றதே யாயின் யாருக்கார் துணைய தாகுவர்கள்
அவரவர் தேக முமொழி துடனே யாதர வாரென வொடு
அவரவ ரடைதன் னெறிகண்டு றவுடைய மாதர வாதர வாமோ.

(மகாராஜதுறவு.)

" இலர்பலராகிய காரணம்
நோற்பார் சிலர், பலர் நோலாதவர்."

" அழுக்காறவா வெகுளியின்னாச்சொனான்கு
மிழுக்கா வியன்ற தறம்."

" அழுக்கா றுடையான்க ணாக்கம்போன் றில்லை
ஒழுக்க மிலான்க ணுயர்வு."

" நிறையுடைமை நீங்காமைவேண்டிற்
பொறை யுடைமை போற்றி யொழுகப்படும்."

" எனைப்பகையுற்றாருமுய்வர் வினைப்பகை
வீயாது பின் சென்றிடும்."

" திறனல்லதற்பிறர் செய்யினுநோநொந்
தறனல்ல செய்யாமை நன்று."

" பிறர்க்கின்னா முற்பகற்செய்யிற்
றமக்கின்னா பிற்பகற் றாமேவரும்." (திருக்குறள்.)

(இதிப்படியிருக்க) இல்லறத்திலுள்ளோர் இல்லறம்நீங்கி துறவ ரந்தாங்கி வானப்பிரஸ்தாசிரமமோங்கி நாட்டைவிட்டு காட்டின் மலைச் சாரலில்போய் தவமிழைப்பதே கடைப்பிடியான தருமம். அந்தவானப் பிரஸ்தத்தின் வழியாவது; பொருள் பெண்டு, பிள்ளை, மண், மனை, இவைகளை நினையாமல், நல்வினை தீவினை மயக்கமில்லாமல், மழை, வெயில் கானல் கல், காடு பள்ளமேடு, புற்பூண்டு பாராமல், பஞ்சேந் திரியங்களையும், நிக்கிரகித்து, காமக்குராதிகளையுமொழித்து, தானென் கின்ற ஆண்வமலமறுத்து, உடலபிமானம்விட்டு, சிகை, யெக்கியோப வீதங்களைந்து, தண்டு கமண்டலந்தாங்கி, மரவுரி யுடுத்தி, பெரிய மகானுபாவரைவிரும்பி தேடியடுத்து, யோகசாதனத்தி லுயங்கி, விதி விலக்குகளை யனுசரித்து விருப்பு, வெறுப்புமில்லாமலிருப்பவர், பிறப் பிறப்பு அற்றவர். இதற்குமேற்பட்ட தருமமில்லை. மற்றவையெல்லாம் இத்துறவிற்கு சமானமொன்றில்லை. மற்றெவையும் பந்த சம்பந்தங்க ளாகும்.

தேகசம்பந்தத்தினியல்பென்னவெனில், பொருள் பொருளெ ன்று நினைத்துக்கொண்டு, யெத்தனையோ பாவங்களானாலுஞ்செய்து பொருளை சம்பாதிப்பதும், அப்பொருளை போஷிப்பதும், அப்பொ ருள் அழிந்துப்போவதும் இத்யாதி விஷயங்களினாலும் நேரிடுந் துன் பம். ஆகையால் யெப்போது பொருளாசை விடுகின்றதோ அப்போ தே வியசனம் விட்டது. என்றுரைக்க அதற்கிடாக, பட்டணத்தடி களும் நவகோடி திரவியத்தையும் கொள்ளையிட்டு துறவடைந்தனர்.

கெடுவதாம் பொருட் செல்வமே
 பல்வகைக்கிலேச மற்றது தன்னை
விடுவதே சுகமெனவு மோர்ந்திலை
 முனம்விடுத் துளோர்க் குனைப்போலும்
நெடியசுகம தில்லையோ சொல்லுதி
 நெஞ்சமே இனிபற்றற் றடைதுமேலரனருளையே
பொருளென வருஞ் செல்வமதுதானே. (வைராக்கியசதகம்.)

இன்னாருங்பொருளை யீட்டுதலுந் துன்பமே
பின்னதனைப்பேணுதலுந் துன்பமே—யன்ன
தழித்தலுந் துன்பமே யந்தோ பிறர்பா
விழைத்தலுந் துன்பமே யாம். (நீதிவெண்பா.)

தேடப்படும்பொருளைச் சிக்கனமாகப் புதைத்துக்
கோடிக்கொரு நிமிடங் கொள்ளுகிலுங்—கூடாத
வாணாளைவீண்கழிக்கு மானுடரைப்போன் மயக்கம்
பூணார் பெரய்கண்டு துறப்போர். (நாலடியார்.)

வினைப்போகமே யொருதேகங்கண்டாய் வினைதானொழிந்தாற்
றினைப்போதளவுநில்லாது கண்டாய் சிவன்பாதம்நினை
நினைப்போரைமேவு நினையாரை நீங்கிந்நெறியினின்றா
லுனைப்போ லொருவருண்டோ மனமே யெனக்குற்றவரே.

மக்களாக்கையிற் பிறத்தலே யரிது மற்றதினுந்
துக்ககூன் குருடூமை யகத்துறத்தலு மரிது
நற்குலத் திடைவருதலு மரிது ஞானத்தான்
முக்கணீசனுக் காட்படல் முற்றிலு மரிதே. (வள்ளலார்.)

எறியுங் கடலினுகத் தொளையினியாமைக் கழுத்துப்புகுவதுபோல்
பொறிவெம்பிறவி யனேகத்தாற் றுடன் விவேகியெனப் பிறந்து
முறியும் பிறவிப்பயனில விம்மோகமமையுஞ் செய்தொழிலாற்
செறிவதென்னே யிவற்றாலே தினங்களெல்லாஞ் சென்றிடுமால்.
(ஞானவாசிட்டம்.)

மந்திரவாட்பெற்றும் பலகவெல்லான் மற்றதுகொண்
டந்தோ தன் மெய்யை யறிந்தான் போன்
இந்தவுடல் கொண்டு முத்திசெல்லுங் குறிப்பின்றிச்
சிற்றின்பங் கண்டுவினைக் காளாங் கணக்கு. (சித்தாந்தகரணம்.)

அலகுசால் கற்பி னறிவு நூல்கல்லா
துலகநூ லோதுவ தெல்லாங்— கலகல
கூவுந் துணையல்லாற் கொண்டுதடுமாற்றம்
போவுந் துணை யறிவாரில். (நாலடியார்.)

இதிப்படியிருக்க, புத்திராசை பெரிது புத்திரப் பேறு இல்லா மற போனால் மிகவும் பிராந்தி, புத்திரன் கிடைத்தாலோ அதற்கு வேண்டியதுக்கம் இவனோர் பிள்ளையார் எத்தனி ஜன்மமெடுத்து யெங் கெந்த ஊரில் எத்தனை பிள்ளைகளிருந்திருக்கும் இது சிருஷ்டியி னுடைய சுபாவம். சிலவேளை தோன்றி உடனே அழிந்துபோம், சிலநாள் வளர்ந்துப் போய்விடும் அதற்கு திருஷ்டாந்தம், ஒருமரத் தில் கொழுந்துதளிர்த்து, இலைபழுத்து உலர்ந்து சருகாகி உதிர்வது போல், இந்தவுடலும் குழந்தை, பால, யெளவன, குமார, வயோதிக பருவம் வாய்த்து பாவபுண்ணியத்திற் கீடாய் விக்கலு மிருமலு மேன் மேலுயங்கி யோங்கிடு வாயு மொடுங்கி யுள்வாங்கி நீங்கினபோது எம வாதனை வாய்த்து நல்வினை தீவினைக்கீடாய் எடுத்தவுடல், வினைரச மொழிந்தால், மின்னலைப்போல், கனவாய் காட்டிமறையும். ஆகையால் இந்திரஜாலங் கனவு கானல்நீர்யென உலகமென்று மறையும் புகலும்.

இப்படியாகும் பொய்யானதேகம் மெய்யென்று நம்பின வீணர் சத்தை விட்டு, அசத்தைத் நம்பி தன்னுடைய தேகம் தேகியென மயங்கி நிலைதடுமாறி நாரியர்பால் நலங்குலைந்து போகுபவர்கள் விவேகிகளல்ல. இவர்கள் பிறவி வேரறுக்கமாட்டார்கள். இவர்கள் எப்போது கடைத்தேறுவார்களென்றால், பிரபஞ்சம மாயாப்பக்கம் நித்தையென்றுணர்ந்து சன்மார்க்கத்திறந்து பெரியோர்களை யடுத்து, தத்துவாதிகளை நியதிகளைந்து, தான் தேகியென்றறிந்து, ஞானஞ் சிறந்து தன்னைத் தானறிந்து கண்டகாட்சி பெருமோர் அரசொருவாரு தானேகக் கண்ட அன்னார்க்கு நற்கருமம் பரிசரிக்க மனம் நீங்கும். அதன்னியில், உலகை விரும்புகிறவரை பிறப்பும் அப்பசந்தோஷமுள்ள பயித்தியக்காரனவன். அவ்வித நடைபொழிந்தகன்றே, முற்று முணர்ந்த தலைவன், அவனுக்கு ஜனன மரண மொழியும்.

இன்னமுநான் பிறந்ததுமுதல் இறக்குமளவரையில், என்ன நக வென்றெண்ணிப் பார்த்தால் வினிதிறவிரியும்; இது வண்ணேருமுஞ் சந்தேகமில்லை.

இத்தேகம் பிறக்கும்போது ஆலைவாய்ப்பட்ட கரும்புபோல் யோனிவாய் நெருக்குண்டு. பரிசுடப் பாரதலும். கத்திபோல், வெக்கச்சிக்கத் திரிகோண யோனிக்குழியில் ரத்தப் பெருவாகத்தட்டு பட்டு, சுத்தநாள் மிதந்து அனைப்பற்றிப், புரிக்குதிரால் கிருமி, வெப்பநீரோடு நீங்கி, நிலைகெட்டு கிருமிபோலத்தாய்த் திரும்பி, கிருமிதலைத்தில், மலைக்கூந்தல் கலந்து. பூமியிற் பிறந்து பாலைபுரச்சையா கக்கா கத்தபோதுமுதிசலப்பிடித்தக்கும் ன உவாவாவென்றழுதபோது முக்கெடுத்து, காதுமுலி கண்களை விளக்கி, அப்பாலைத்துலங்க ஆணுக்கு பெண்ணும் பெண்ணுக்கு ஆணுமாக அழகுகட்டி வளர்ந்து, ஆண்பிள்ளை பருவமடைந்து, தன்னைப் பெற்ற தாய் தந்தையர்களைத் துறந்து சரசமாதுடன் கலந்து பணம்தேடப் பறந்து, பிணமாகி இறந்துபோவதுந் துன்பமே! இறந்தும், அகம்நாடி போகாமல் யமபாசத்தில் அகப்பட்டு வதைப்படுவதுந் துன்பமே! பணச்செருக்குனுல் ஆங்காரமடைந்தபோது இருவகையிலுந் துன்பமே; ஆகையால் வீண்காலம் போக்காமல் வீண்வார்த்தையாடாமல் பெரியோர்களைப் பேணி கல்வி கேள்விகளைக்கேட்டு யமபாசத்தின் வசத்தகப்படாமல் ஆத்மஞானம் பிறந்து பிரபஞ்ச மாயாபாசந் தெளிந்து மனத்தணிவு வந்தவனெவனே அவன் பிறவிசாகரங் கீந்தி கரையேறினவனுவன்.

அதனால் தேவேந்திரன் முதலிய தேவர்கள், ரிஷிகள், முனிவர்கள் இவர்களெல்லாம் நல்வினை வசத்தராய் மனமொடுங்கி மெலிந்து சர்வ

சங்க பரித்தியாயஞ்செய்து, என்னை நாடியிருப்பவர்களுக்கு சுகமல்லாமல் மற்றவர்களுக்கு சுகமேயில்லை; வேதாந்த வின்பங் கண்டவர்கள் பேரின்ப ஞானானந்தங் கொண்டவர்கள்.

அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தலரிது. (திருக்குறள்.)

கருவிடை யழுந்துந் துன்பமும் நிலத்தின்
கண்ணுறிற் கொடிய வெந்நோயான்
மருவு வெந்துயரு நரை திரை யெய்தி
வருந்திடுந் துன்பமுங் கூற்று
ஒருவினை யொருவுந் துன்பமு மீட்டுங்
கருக்குழி யொன்றூ துயரும்
வெருவற வெண்ணி யின்ப வீடதனை
மேவ நன் குணர்தலே வேண்டும். (ஆனந்தத்திரட்டு.)

இல்லறமென்னுந் தருமத்திலிருந்து துறவறம் பெறலாகும். அதெவ்வாறெனில் மூவாசையாகிய, மண், பெண், பொன், முதலிய பாசங்களின், புளியம்பழத்தோடுபோல் பற்றில்லாதிருந்து, அகம்புறமொத்து சகம்மித்தையென்று சுத்தமாய்த்தோற்றி உற்றுப்பார்த்த பேர்களுக்கு இல்லறத்தானென்று நடைநொடிபாவனைக் காட்டி உள்ளம் பக்குவப்பட்டு மனத்துறவு பூண்டிருந்து, பலனைப்பெறுவதுமுண்டு. ஆனால் பெண்டுபிள்ளை பண்டுபதார்த்தத்திலிருந்து இப்பேர்ப்பட்ட பெருந்துறவு அடைவது மிகு துல்லபமாகும். அப்படிக்கானல், அது மகா சத்துவப்பெருமையாகும்.

இல்லறம்பொருளென விருந்துகாமியம்
அல்லல்சேர்வாழ்க்கையி னமிழ்ந்துநிற்பினும்
எல்லையில்ஞான வின்பத்தையெய்தியோர்
புல்லினும்புல்லிடா திருப்பர்புண்ணியோர். (வள்ளலார்.)

காமமாதிகள் வந்தாலுங் கணத்திற்போம் மனத்திற்பற்றூர்
தாமரையிலைத்தணீர்போற சகத்தொடுங் கூடிவாழ்வார்
பாமரரெனக்காண்பிப்பார் பண்டிதத் திறமைகாட்டார்
ஊமருமாவாருள்ளத் துவகையாஞ் சீவன்முத்தர். (கைவல்யம்.)

ஆசையாலித்தமாயை யறிவினை முழுதுமூடித்
தேகமேயான்மாவென்றுஞ் சேயிழைமடவார் தங்கள்
போகமேமோக்ஷமென்றும் புத்தியைத் திரிவிபண்ணுஞ்
சோகம்பாவனையாலித்தை தொலைப்பர்கள்சீவன்முத்தர். (வள்ளலார்.)

அதினும் சாதுசங்க நாட்பயிற்சியால் தத்துவஞானயோகத்தி விருப்பமுள்ளார்க்கு சித்தியான ஞானமும் வரும், முத்தியும் பெறுவார்கள். அதினும், கிரியையாகிய ஆசாரநெறி தப்பாமல் ஈஸ்வர தியானத்தி விருப்பவர்களும நற்குணநற்செய்கையுடன் அவாவின்மையும நன்மை தீமைகளுமொன்றாய் நாடியபேருநின்னாமுண்டாகும.

வேதநூ லுணர்தலாலும விதிவழி யொழுகலாலுந்
சூதகந் துறத்தலாலுந் தாயையா றதலாலும
பேதமை பிரிக்கையாலும பெரியவா கட்டத்தாலும்
நாதனை யகத்துணர்ந்த ஞானியென் றறியலாமே. (வள்ளலார்.)

எப்பொருள்களுந்தானேயி லங்கிடப் பிரமமீசன்
அப்படி விளங்குகின்ற வறிவுதானென்பதே
மெய்ப்படி பூணாமேவேறா வெபனிலைன் றுசொய்யே
யிப்படி ஞானநன்னூ லிசைத்திடும் பரிசனை. (அருணகிரி.)

காதுநா விரிவாய்ப் பயில் ...
மாறிகுலம பொன்னுடையன் ...—...
கொடுக்கவல்ல ...
விடாவொடா ... (ஒழிவிலொடுக்கம்.)

...
...—...
...
... (வள்ளலார்.)

நடுங்குமவெங்குபமாவனத்துழல்வோர்க்கு நெறியுணு ஞானமீன்று
இடும்பைதீர பதுவெறிலே நிருவிகற்பதுரகமயிலகுமஞானி
குடம்பைபோனதேகம் புள்ளெனச்சுழ்ந்த கொரங்கசம வேறதாயநிற்பன்
தொடங்குமெல்வினையெல்லையிவாகெட நீந்துனுமோதுன்னிருள்சுடரை.
(சுகசங்கிதை)

சாயுங் கிழக்குஞ் சனியுருத்தி ...
மாயும் பிறப்பசல மாட்டுமோ—காயத்திய
றங்குரு சதாசிவனைத் தானுணர ... ...
யெங்குமாய்க் கண்டா ... (வள்ளலார்.)

கங்கை யாடிலென் காவிரி யாடிலென்
கொங்கு தண்குமரித் துறை யாடிலென்
ஓங்கு மாகட லோதநீ ராடிலென்
எங்கு மீச னெனாதவர்க் கில்லையே." (திருநாவுக்கரசுசுவாமி.)

நன்று நோக்கிலென் பட்டினி யாகிலென்
குன்றமேறி யிருந் தவஞ் செய்யிலென்
சென்றுநீரிற் குளித்துத் திரியிலென்
என்றுமீச னென்பார்க்கன்றி யில்லையே.

ஞானத் தாற்றொழு வார்சில ஞானிகள்
ஞானத் தாற்றொழ வேனுனை நானலேன்
ஞானத் தாற்றொழு வார்கள் தொழக்கண்டு
ஞானத் தாலுனை நானுந் தொழுவனே. (திருநாவுக்கரசு.)

உயிர்க் குயிராயீசன் ஒழியாம னிற்க
வுயிர்க்குயி ராக் கண்டிங் குணரா—துயிற்குயிரை
வேறாக்கிப் பூசிக்கும் விரகிலிக்கு முண்டாங்கொல்
வேறாகா மெய்ஞ்ஞான வீடு.

அறிவே சிவமென் றறைந்த திருமூலர்
பிரிவின் மொழியொன்றைப் பிடித்தார்—பிரியாச்
சநந மரணமிலைச் சங்கேதமில்லை
மனன மிலையென்றே மதி.

மாதா பிதாநாஸ்தி மற்றெக்கலுமே நாஸ்தி
யாதார வைப்பு மாண்மனையுந்—தீதான
நாஸ்தியிவை மெய்யென்று நம்பாதே யென்றறைந்த
மாத்திரத்தே வீடுற்றான் மன்.

எல்லா மிறந்து மிறவாத ஞானிகட்குச்
சொல்வார்க டட்டாந்தஞ் சோம்பரையே—யெல்லாமும்
தீறக் துறந்த துறவிக்குத் திட்டாந்தம்
போர்முகத்து வீரமனம் போல். (வள்ளலார் சாஸ்திரம்.)

இன்னமுஞ் சித்தியான யோகஞான முத்தியுஞ் சொல்லுகிறேன் கேள். பிருதிவி யாதி பூதங்களும் வாக்காதி கர்மேந்திரியங்களும், சப்தாதி தன்மாத்திரைகளும், சுரோத்திராதி ஐம்புலன்களும், மனமாதி அந்தக்கரணங்களும், பிரகிருதிமுதலான தத்துவங்களும், ஆக, ஆன்ம தத்துவம் இருபத்துநான்குடன் அளாவிக்கொண்டு அவ்வியக்தனை அணுகி ஆன்மா, பிரகிருதியென்கிற பெயர்பெற்று மயங்கி, மாயையி லுயங்கி மலைத்துத் தியங்கி கெட்டுப்போகின்றான்.

அதனிடம்நீங்கி பிரகிருதிமாயையை வேறாக்கி தான் சுயம்பிரகாசனென்றறிந்து இருந்தானானால் அவன் மறுவுடலெடுக்கான். இது தான் முத்தியின் விவரம்.

மித்தையாமுடலமென்ன விவேகமேவிடுதலாலே
நித்தநானெனும்விவேக நேரிடும்நேர்ந்தகாலை
முத்தர்போலவைகிடைக்குங் கிடைத்தலான்முதிர்ந்தஞானஞ்
சித்தியாமன்றேசிவனு முத்தனுஞ்சிவனுமாவன். (வள்ளலார்.)

ஈசனை அறியும் வண்ணம்.

பொன்னையன்றிப்பூணில்லை பூணையன்றிப்பொன்னில்லை
என்னையன்றிச்சிவனில்லை சிவனையன்றியானில்லை
யின்னவண்ணமறிந்தோனே யீசன்தனையுமறிந்தோனு
மின்னவண்ணமறியாதா னீசன்தனையுமறியானே.

அன்னமயமுதலாக வானந்தமயமீறாய்ப்
பின்னநிலையிவைகடந்த பேரின்பசாகரத்து
ளின்னபடியென்றறிந் திருந்தசிவயோகிக்குச்
சொன்னமகளும்புவியுந் துரும்பாகத்தோற்றுமால்."

நாயேறி வீழ்ந்தென் நடாத்துகிலன் ஞானிக்குப்
பேயாஞ் சகம்பழித்தென் பேணுகிலன்—றோயார்
பெருமை சிறுமையிலை பின்னு முன்னுமிலை
வரையற்று வேண்டிய செய்வார். (ஒழிவிலொடுக்கம்.)

சுயம்பிரகாசசோதியாயின்பச் சொரூபமாயருந்தொணுவமுதாய்
வியந்தனுபவத்தீர்வேதவாக்கியத்தால் மெய்யருட்குருவருட்கடைநோக்காற்
றயங்கினோர்ஞானசம்பன்ன ளவுரேயனுபவ சம்பன்னரென்ன
வியந்துமுக்தாலுஞ்சத்தியஞ்சொன்னே மினிப்பயமிலையருந்தவரே.
(சூதசங்கீதை.)

இனி முக்குணத்தினியல்புங் கூறுகிறேன் கேள்:—இராசதம், தாமதம், சாத்மீகம், என்கிறகுணங்கள் மூன்றும், மாறிமாறி நாழிகைக்கு ஒருவிசைவரும், எந்தகுணம் எப்போது வருகிறதோ அப்போது அந்தக்குணத்தின் தன்மையை அதுவிளைவிக்கும். அதாவது:—

இராசத குணத்தின் செய்கைகள்:—உன்மத்தம், சித்தப்பிரம்மை, சோம்பல், தும்பல், கோபம், பொய், களவு, காமம், சண்டை, தூக்கம், கெடுதி.

தாமத குணத்தின் செய்கைகள்:—மானம், கல்வி, இன்பம், வண்மை, பேரறிவு, உச்சாகம், சோடசதானம், நல்லொழுக்கம், சீலம், தபம், செபம், இராஜரீகம்.

சாத்மீக குணத்தின் செய்கைகள்:—ஞானம், அருள், சத்தியம், பொறுமை, உண்மை, சாந்தம், வேதசாஸ்திரபுராண ஆராய்ச்சி.

MAHAMAHOPADHYAYA

அம்மூன்று குணங்களிலும், இராசதம் தாமதமாகிய இரண்டையுந் தள்ளி சாத்மீக குணத்தினால் ஆராய்ந் தறியத்தக்கதை யறிந்து அதையும் வெறுத்து குணரகிதமான வஸ்துவையறிய சாங்கோபாங்கமாக சாஸ்திர நிலையறிந்து நின்றவன் இவ்வுலகத்தை மித்தையென்றுன்னி பிராந்திகொள்ளாமல் பழுதையைக்கண்டு பாம்பென்றெண்ணாமலும், கானல்நீரைக்கண்டு, சலமென்றெண்ணாமலும், கட்டையைக்கண்டு கள்ளனென்றெண்ணாமலும், ஐயந்திரிபற திடசித்தம் பெற்று நிற்குண சொரூபியாயிருப்பான்; இவனே முக்திக்கதிகாரி.

அது நீங்கலாக தாமதகுணத்தினால் பாவம் பிறக்கும், இராசத குணத்தினால் புண்ணியம்விளையும், இப்பாவபுண்ணிய மிரண்டும், சாத்மீககுணத்தினால் ஒழியும். அக்கணமே யழியாப் பிரகிருதியற்று சுகங் கிடைக்கும்.

சாந்தமுடை யோன் றவசி யவாவற்றோன்
வாய்ந்த துறவி மனமாண்டோ னைந்துணர்ந்து
யோகிபரி பூரணத்தை யுற்றுணர்ந்தோ னல்லசிவ
போகியெனச் சொல்லும் பொது. (வள்ளலார்சாஸ்திரம்)

இதிப்படியிருக்க, பஞ்சேந்திரியங்களை பாழ்படுத்துவதற்கு ஒருத்தராலு முடியாது. விடாமுயற்சியால் ஒருவேளை மனங்குவிந்து வசப்பட்டால் செயிக்கலாம். அப்படி மனங்குவிவது மகாபிரயாசம். மனதின்விகற்பத்தினாலேயே எண்ணிறந்தகோடி தேகமாயிற்று. அப்படிப்பட்ட மனதையும், அம்மனத்தின் விரிந்த பேதத்தையும் ஒடுக்குந் தன்மையுமறிந்தால் அவன் என்றைக்கும் அழியாத பரமானந்த சுகத்தையடைவன். இப்படிக்கு மனமொடுங்கி, அவ்வியக்தனாகி எல்லாந்தானென்றுணர்ந்து தான்கண்டவிடமே நிலையென்று ஆச்சாரியனனுக்கிரகத்தால் தேறி, சித்தசுத்திபெற்று எங்குந் தானென்கிற பிரகாசமடைந்து பிரமத்தியானனா யிருக்கவேண்டுமென்று வேதமுடிவான மகாவாக்கிய மிருக்கிறபடியால் அந்தவாக்கியம் (தத்துவமசி) யென்கிறவாக்கியம். இது குரு முன்னிலையில் அறியத்தக்கது.

ஆதிதிருநான்மறை முடிபிலறையுந் தத்வமசியென்றே
யோதிலது நீயானா யென்றுரைக்கு மும்மைப்பதமாகப்
போதமுடையோ யிதன்பொருளை யெவ்வாறெடுத்துப் போதிப்பேன்
பேதமகன்ற வுள்ளத்தாற்கா ணும்பெரிய வாக்கியமே. (மகாவாக்கியம்.)

நாலுவேதமுந் தத்துவ மசியென நவிலுஞ்
சாலநீர் தெளிந்துறுதி கொள்வீரெனச் சாத்திப்
பாலலோசனன் மவுனமுற் றிருந்தனன் பருவக்
கோல நால்வரு நிட்டையைக் கூடினரன்றே. (வள்ளலார்.)

முகத்துக் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்காள்
அகத்துக் கண்கொண்டு பார்ப்பதே யானந்தம்
மகட்குத் தாயார் தன் மணாளனோ டாடிய
சுகத்தைச் சொல்லென்றாற் சொல்லுமா றெங்ஙனே.

(திருமந்திரம்.)

ஆத்தும ஞானமறிந்த மேலோரை யறிந்தவ ரனைத்தையு மறிந்தோர்
சாற்றுமிச் சான்றோரைக் கணமேனுந் தங்கியதவத்தி லெப்போதும்
வேற்றடங் கருங்கட் கவுரியோடியாமும் வீற்றிருப்போஞ் சிவமகிமை
யேற்றதீர்த்தங்க ளியாவுமங் குளதாமெண்ணிய தவ்வயினண்ணும்.

(சூதசங்கிதை.)

எவன்மனையிடத்தி லிணையின் மெய்ஞ்ஞானி
யிறைப்பொழுதேனு வந்துறினும்
அவன்குலமனைத்தும் பாகதிதனையின்
றடைந்தனரென்று கூத்தாடுந்
தவமுளோ யான்ம தத்துவா னுபவ
னேக்கினற் றீவினை தனியுஞ்
சிவசொரூபத்தோன் றரிசனந்தானே
தெளிந்த மெய்ஞ்ஞானச் சித்தியதாகும். (சூதசங்கிதை.)

இதில் யோகமென்பது ஒரு நெறியிருக்கிறது. அது ஐம்புலனையும் மனத்துடன் கூடியிருக்கும் விதம். அது நல்லசிந்தை, அருள், பொருமை, புகழ்பொருந்திய ஆசனமேற்று யோகத்திலிருந்து யாதொரு பாசமில்லாமல் மனப் பற்றற்றிருப்பார்கள் என்றால்; பிராணாதிவாயு தன்வசப்படுமானால், ஆயுள்விருத்தியும் புனிதமேனியுமா யனேகநா ளிருக்கலாம். உடல் அழியாது இக்கருமபூமியில் அவர்கள்தான் காய சித்திபெற்றபேர்கள். அவர்களுக்கு நினைப்பில்லை மறப்பில்லை நிலையில்லை தொல்லையில்லை. அவர்கள் ஒருவித முக்தியைமுடித்து வைத்திருப்பவர்கள். அவர்கள்தான் சீவன் முத்தர்களென்று சொல்வது.

அவர்கள் உடலை உல்லாசமாக வைத்துக்கொண்டு ஒன்றுமில்லாமல் எல்லாமுள்ளவர்களாய் எப்பொருட்கும் வல்லவர்களாய் நல்லவர்களாய் நீர்பூத்தமேனியாய் எம்போலுருவுகாட்டிக்கொண்டு புகழுடன் இன்பதுன்பங்களெல்லாம் சமமாயுன்னியறிந்து சுகித்து தன்னனுபவ

வானந்தங்கொண்டு மகா தூய்மைவாய்ந்த வாய்மையுடைய சித்தபுருடர்கள். அவர்கள் காரியம் உலகத்தவர்கட்கு பிரத்தியேகம். அவர்கள் உள்ளும்புறம்பிடங்களும் நாம் சொந்தமென்று நவின்றனர்.

மகாதேவியார் அதைக்கேட்டு மகிழ்ந்து, சுவாமி! சுத்தஞானவான்கள் உமது தேஜச்சொரூபராய் சாரூப்பியமடைவார்களென்று அருள் செய்திருக்கிறீர்கள். அதனுடைய விபரமும் அடியாளுக்கருள்செய்வீர்களென்று போற்றியபோது அமலமூர்த்தியாகிய கருணாநிதி அருள் செய்கின்றார்.

ஓ ஆதியேகேள்! மறைகளினாலறியப்படாத சிற்பரம்பொருள்யாம். எமக்கு சகள, நிஷ்கள, விலாசமென்று இரண்டுண்டு. அதுகளில் நிஷ்களமாவது, பரிபூரணமாய் நிறைந்து எங்குந்தானாகி இருக்கப்பட்டவஸ்து. அந்த வஸ்துவோ எம்மைத்தவிர எள்ளத்தனையுமின்றி செகத்தெல்லாம் எமது பரிபூரணசொரூப நாமக்கிரியைகளில்லாத விலாசமாகயிருக்கும். அதுபோல், சுத்தஞானவான்களெல்லாம் எமது நிஷ்களசொரூபவிலாசத்தை யடைவார்கள்.

உலகில் இத்தன்மையுள்ள பெரியோர்களாலும் பதிவிரதா உத்தமபத்தினிகளாலும், அரசுபுரியும் மேன்மையான நன்நீதியாலும், காலத்தில் பூமியில் மழைபெய்கின்றன.

இதோநாமிருப்பது சகளதோற்றம். யோகீஸ்வரர்களியாவரும் சகளீகரித்த சாரூப்பியசொரூபம் பெறுவார்கள்.

இதன்றியும், சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சிய, பதவியென்னும் நான்குவித பதவிகளுமுண்டு. அவைகளை விவரமாகச்சொல்லுகின்றேன் கேள்:—

சகளமென்பது எமது சொரூபம். உலகத்தில் ஸ்தாபித்திருக்கும் சிவலிங்கமூர்த்தியை நிர்மாணித்து அதை வேதங்களில் விதித்திருக்கிறபடிக்கு மனோ வாக்கு காயங்களினால் பலவாராக என்னை தோத்திருத்து நிஷ்காமியமாயிருந்து எமது அருள்பெறுவார்கள். அதிலும் சரியை, கிரியை, யோகம், ஞானமென்னும் நான்குவிதபடிகளுண்டு. அதில் (சரியையாவது)-எமது கோயிலுக்குப்போய் எம்மைவழிபடுதல், திருவலகிடுதல், மெழுகல், உழவாரப்பணிசெய்தல், நந்தவனம்வைத்தல் பூக்கொய்துமாலைதொடுத்தல், திருவிளக்கிடுதல், சந்தனமிழைத்துக்கொடுத்தல், திருக்குளத்தை சுற்றிலுமிருக்கும் புற்பூண்டுகளை யெடுத்து சுத்திசெய்தல், மடம் மண்டபம் சத்திரம் ஆலயம், புதுப்பித்தல், அன்னதானஞ்செய்தல், தண்ணீர்ப்பந்தல்வைத்து எமது அடியார்களுக்கு அமுதூட்டல், அவர்களுக்கு தீங்குவராமல்காத்தல், அவர்

களுக்கு பணிவிடைசெய்தல்முதலிய திருப்பணிசெய்வோர் முதற்படியாகிய சரிதையுடையோர்; அவர்கள் தேவர்கள் கொண்டாடப்பட்ட எமது சாலோகபதவியையடைவார்கள்.

கிரியையாவது:—வேதத்தில் விதித்திருக்கிறபடி கோயிலில் ஸ்தாபித்திருக்கிற எமது சொரூபத்திற்கு, திருமஞ்சனம், அலங்காரம் உற்சவஞ்செய்வித்தல், திருக்கோயில் புதுப்பித்தல், ஜீரணோத்தாரணஞ் செய்வித்தல்,வாகனாதிகள் பிரதிஷ்டைசெய்து தூபதீபமியற்றி அருச்சனைபுரிந்து எம்மைப்புகழ்ந்து பாடியாடிப் பரவிப்பணிதல்,முக்காலங்களிலுந் தரிசனஞ்செய்து அடியார்களைப்பணிந்து ஆலவட்டம், குடை தோள்தாங்கப்பெற்று இன்பமுடன் வணங்கிவருதல், இப்பணி செய்வோர்கள் இரண்டாவது மார்க்கமாகிய கிரியையுடையோர். இவர்கள் தேவர்கள் கொண்டாடப்படும் எமது சாமீபப்பதவியை யடைவார்கள்.

யோகமாவது:—எமது அருட்தரிசனம். யோகானந்த அடியார்களிடத்தே தோற்றுவித்தல்; அதாவது, ஆசிரியனையடைந்து அனுக்கிரகம்பெற்று அவர்சொன்னவழியினின்று அவர் பிரசாதித்த சிவ முத்திரையால், மனதை நிருத்தி இடகலை, பிங்கலை, சுழிமுனைநாடி மார்க்கமாய்ச் செலுத்தி, வாயுவை அசைவாநிறுத்தி, ஐம்புலன்களை யடக்கி விஷயங்களின் வழி மனதைச்செலுத்தாது, இத்தேகத்தில் ஆராதாரமாதையுங்கண்டு ஆங்காங்குள்ள அதிதேவதைகளை ஆசிரியன் சொற்படி அவ்வாராதார தேவதைகளை மனக்கண்ணாற்கண்டு தரிசித்து அஜபாநலத்தில் குண்டலிசத்தியருளால் அமுதபானமுண்டு அருட்தரிசனமாக முழுச்சோதிப்பிரகாசமாய்த் தோற்றுஞ் சோதியை மனக்கண்ணாற்கண்டு தரிசிக்கும் யோகநிலைசாதிப்பவர். எமது சிவசொரூபத்தைப்பெற்று முத்தியையடைவார்கள்.

இவர்கட்கு இத்தேகத்திலுள்ள சென்னியே ஸ்ரீசயிலம்; நெற்றியே கேதாரம்; புருவமத்தியமே காசி; அல்லது சிதம்பரம்; கண்டமே மகா கங்கை; மூலத்தானமே குருக்ஷேத்திரம்; இதயமே நினைத்ததைத் தரும் பிரயாகை; அவ் விதயநடுவே தெய்வத்தன்மைபொருந்திய திருவாரூர் என்று வேதங்கூறும். அகத்தும் புறத்துமாகிய தீர்த்தங்களில் மூழ்கி, அவ்வாறே தெய்வதலங்களும் போற்றி நிராசையால் சிவானந்தமுத்தியையடைவர். அறிவிலவ்வளவு சிறந்திடார் புறத்தீர்த்தத்தில் மூழ்கிப் புறத்தலங்களைப்போற்றி, என்னாளும் போகத்திற் கட்டுண்டு உழலுவர். பெருமைபொருந்திய யோகிகள் ஆன்ம தீர்த்தத்தில் மூழ்கி, யோகமார்க்கத்தால் தெய்வத்தலங்களைத்தரிசிப்பவர் கருமங்களை வேண்டார். மட்பாண்டத்தைப் பலவிசையலம்பியுஞ் சுத்தியடையாதது

போல், நீரால் ஆன்ம சுத்தியடையமாட்டாது. பின்னெவ்வாறெனில், இவ்வுடலானது ஆன்மதீர்த்தத்தாற் சுத்தியடைந்து, உடனே சித்தசுத்தியும் ஞானயோகசித்தியுமடைவர். சரியை கிரியையுடையவர்கள், பரமசிவத்தை ஆலயாதி விக்கிரகங்களிற் கண்டுவணங்குவர். யோகத்திற் பழக்கமுடையவர்கள், இதயகமலத்திலும், சாக்கிர சொற்பனத்திலுங் காண்பர். மெய்ப்பொருளுணர்ந்த ஞானியர்கள், நினைத்தவிடத்து எங்குமாய்க் காண்பார்களென்று விளக்கமாகிய வேதங்கூறும்.

இதிப்படியிருக்க, ஆசிரியனால் அனுக்கிரகித்த முத்திரையால், இடகலை பிங்கலை சுழிமுனை நாடியில் இரேசகம் பூரகம் இரண்டையும் நீக்கி, கும்பகம் ஒன்றையே பிராணாயாம சாதனஞ்செய்யின், பாதகமனைத்தும் நீங்கி மனோவெண்ணங்கள் நசித்து மேலான ஞானத்தையடைவன். இப்பிராணாயாமத்தை என்றும் அப்பியாசிப்பவனுக்கு எவ்வுலகத்திலும் அரிதானது ஒன்றுமில்லை. ஆதலின் சர்வமுயற்சியாலும் எக்காலமும் அன்புடன் அப்பியாசித்து சுவாசத்தை ஆக்ருடணஞ்செய்து வயிற்றிற்பூரித்து, நாசிநுனியிலும், நாபிமத்தியிலும், புருவமத்தியிலும், பாதப்பெருவிரலிலும், சிந்தையை வைத்திருக்கவேண்டும். இவ்வாறாக மேன்மையுடன் புரிவோன், சகலரோகங்களும் நீங்கி நூறாண்டுகாலஞ் ஜீவித்திருப்பன். அச்சாதனையை நாசிநுனியின்கண் செலுத்தினால் வாதமானது வசப்படும். நாபிமத்தியில் செலுத்தினால், பற்பல வியாதிகள் நீங்கும். தாட்பெருவிரலில் செலுத்தில் தேகம் கனமின்றி இலேசாகவாகும்.

நாவினாற் சுவாசத்தை, ஆக்ருடித்து விழுங்கில், தாகரோகங்கள் விலகும். சுவாசத்தை நாவினால் மிக்க வலிவுடன் விழுங்கி நாவடியிற் பொருந்தும்படியாகச் சித்தத்திற்சிந்தனைசெய்து, அமுர்தபானஞ்செய்யில், தேவர்கள்புகழுடன், பலவித சுகங்களும் நீங்காது பொருந்தும்.

இடகலையாற் சுவாசத்தை ஆக்ருடித்து புருவமத்தியில் நிறுத்தித் தூயமனதுடன் சிந்தித்து அமுர்தபானஞ்செய்தால், வியாதிகளனைத்தும் நீங்கும். இட வல கலைகளாற் சுவாசத்தை உள்ளுக்கிழுத்து ஓர் மண்டலகாலம், மூன்றுசந்தியிலும் நாபியிற் றரித்தால் சகல ரோகங்களின் வலியும் நீங்கும்.

சுவாசத்தை நாவினால் இழுத்து, சித்தத்தை நாபியிற் பொருத்தினால் வாதமுதலிய பலதோஷங்களும் நீங்கும்.

இருகலைகளாலுஞ் சுவாசத்தைப்பூரித்து இரண்டுநேத்திரங்களிடத்தும்; காதுகளினிடத்தும், சிரத்தினிடமாகவுஞ் சிந்தனையைச் செலுத்தினின்றால், ஆங்காங்குள்ள பிணிகள் நீங்கும்.

சிரத்தினிடமாகச் சிந்தனையைச் செலுத்தி ஆநந்தம் எழும்புகிற வரையில்,* சிரத்திற்கொண்ட நாட்டத்துடன் நின்றால், பிராணவாயுவானது பிரம்ம ரந்தரத்தையடையும் அக்காலையில் தசவித கருவிகளிலேதேனும் நாதமுண்டாகும்.

அவையாவையெனில்:—கிண்கிணி, சிலம்பு, கண்டாமணி, சங்கம், யாழ், தாளம், புள்ளாங்குழல், பேரிகை, மத்தளம், முகில், என்பனவாம்.

இதுநிற்க, இடைகலை, பிங்கலையென்னும் இவ்விரண்டையும் தான் வசப்படுத்துவதாவது, இடைகலையென்பது சந்திரகலையென்றும், பிங்கலையென்பது சூரியகலையென்றும் பெயர். இக்கலைகள் ஐந்து நாழிகைக்கொருமுறை மாறிமாறி ஐந்துநாழிகை நடக்கும். இதை யோகிகள் அக்கலைகளை தன்வசப்படுத்தி பிராதகாலத்தில், எழுந்திருக்கும்பொழுது, வாரசரம்பார்த்து எழுந்திருக்கவேண்டும். அதெப்படியென்றால், யோகத்தில் பழகுகின்றவர்கள் திங்கள், புதன், வெள்ளி வாரங்களில், சந்திரகலையிலும், செவ்வாய், சனி, ஞாயர், சூரியகலையிலும், வியாழம் பூர்வபக்ஷத்தில், சந்திரகலையிலும், அமரபக்ஷத்தில், சூரியகலையிலும் எழுந்திருந்து, உத்தராயனம், தக்ஷணாயனங்களில், தைமாதம் முதல்தேதியில், பிராதகாலத்தில் சந்திரகலை உதயமாக வேண்டும். ஆடிமாதமுதற்றேதியில் சூரியகலை உதயமாக வேண்டும் இப்படியாகுங்காலத்தில் பொழுதுவிடிய (4)-மணிக்குமேல் மேற்சொல்லிய வேளையில் உதிக்குங் கலையானது, எத்தனைநாழிகை இருக்கின்றதோ அதைப்பார்த்து நாழிகையொன்றுக்கு தேகம் (20) வருஷகாலம் இருக்குமென்றும் அப்படியாகப்பார்க்கும் ஒவ்வொரு நாழிகைக்கும் (20) வருஷமாகில் (5) நாழிகைக்கு பார்த்தநாள்முதல் (100) வருஷகாலம் தேகம் வைத்திருக்கலாகும். இப்படியே ஆசிரியன் சொற்படி பிராணாயாமஞ்செய்துக்கொண்டே வருவோர் வெகுநாள் உடலைவைத்துக்கொண்டிருக்கலாம்.

இந்த அயனம்பார்க்கின்ற முதல்நாள் ஒருவேளை போசனம் பண்ணிக்கொண்டு இரவில் பால் அல்லது ஜலம் உட்கொண்டு தேகத்தை சலடமாகவைத்திருக்கவேண்டும்.

இப்படிமேலான யோகஞ்செய்வோர், இரேசக, பூரக, கும்பக காலங்களில், குறிகொள்ளும் நாட்டத்தகுந்த, மந்திரங்களையும் பிறவற்றையும், குருமுகத்தாலறிந்து, விதிப்படி செய்தல்வேண்டும். அதாவது, இந்நிலைகட்கு அதிபோசனம் அதிநித்திரை, கோபம், புலை, கொலை, கள், காமம், சோம்பல், மிகுநடை இவைகளாகாது. குருவாக்

கியப்படி பத்தியமிருக்கவேண்டும். தேகத்தில் வலிஉண்டாக்கிய பின்னரே, இப்புனிதராஜயோகஞ் செய்யவேண்டியதாகலின், காயகற்பங்கொண்டு இதை அனுஷ்டித்தல் வேண்டுமென்பது சித்தர்களின் துணிபு. இந்த யோகத்தால் தேசமும் பொன்னிறமாகும்.

காமமாதிகளைநீத்துக் கரணவாதனைகடந்து
நாமதுவெனுஞ்சம்பந்த ஞானமேஞானமாகி
வேமொழிப்பொருளைத்தேறி யுணர்வுணராமைப்போக்கி
யாமைபோலைந்தடக்கி நிற்பதே யமலயோகம். (வள்ளலார்.)

மண்ணாசை பொன்னாசை மாதரா ராசையுயர்
விண்ணாசை யாவும்வெறுத் தப்பா—லெண்ணம
துள்ளபடி யானந்த யோகத்தின் மூழ்கி யுட
லுள்ளளவும் நின்று விடு.

எண்ணுஞ் சிவயோக மான்மியத்தை யென்சொல்வேன்
மண்ணுலகும் விண்ணுலகும் வந்திறைஞ்சி—யண்ணலென்
றோலமிடு நீசிவமா யோரிமைப்பு நிற்பையெனிற்
காலனுங் கைகூப்பி நிற்பன் காண்.

சரிதையிலே யீசன் சடவடிவாய் நின்றான்
கிரியையிலே மந்திரத்திற் கிட்டி—யருகிருந்தான்
ஊனமிலா யோகத்திலுள் ளொளியாயே நின்றான்
ஞானமதிற் றானாகினான்.

பெரியவிம் மானிட யாக்கை பெற்றவர்
சரியையுங்கிரியையுந் தான்செய்கின்றிலர்
சரியையுங் கிரியையுந் தான்செயா விடின்
உரிய யோகத்தினை யுணர லாகுமே. (வள்ளலார்.)

ஞானமாவது:—மேற்சொல்லியசரியாதி மூன்றுபடிகளையுங் கடந்து, ஞானசாரியனை யடைந்து பணிவுடன் தொண்டுசெய்து அவர்களால் தத்துவங்கள் (௯௬)ம், நவநவமாக நியதிகளைந்து நின்ற தனது சொரூபங்கண்டு, யான்எனதென்னும் மமதையகற்றி, மண் பெண் பொன்னாசையாகிய மாயையற்று, காண்பான் காக்ஷி காக்ஷிப்பொருள் மூன்றும் நசித்து, சந்தேகமற்று ஏகமாய் பரிபூரணமாய் எங்குந்தானாக யிருக்கக்கண்டு ஆனந்தமாய் மகாமவுனமாயிருக்கும் ஞானிகள் எம்மோடு இரண்டறக்கலந்து எமது சாயுச்சிய பதம் பெறுவார்கள். இதுவே பரிசுத்தமாகிய ஞானப்பிரகாசம். இந்த ஆத்மஞானமறியுமன்னி

யில் எனையவற்றால், சனனமரணமொழியாதுயென்றியம்பி இப்பேர்ப்பட்ட ஞானிகள் நமக்கு சுதந்தரம்தோகையேயென்று சொல்ல; கண்மணியாகிய கர்ப்பகவல்லி களித்து தெண்டனிட்டு, சுவாமி வேதநுட்பங்களெல்லாம் அறியத்தக்கதாக விளம்பினீர்; மூதறிவையுடைய முனீஸ்வரர்களும், ரீஷீஸ்வரர்களும் மகிழ்ந்து துதித்து கதிபெற்றார்களென்று கயிலைமலையாருக்கு, பனிமலைக்கன்னி உபசாரஞ்சொல்லிப் பணிந்தாள். உடனே ரிஷீஸ்வரர்கள் யாவரும் அரன்திருநாமமெடுத்து துதித்து ஆனந்தக்கூத்தாடி செலவுபெற்றுக்கொண்டு நின்று, சூதமுனிவரைநோக்கி சுவாமி ஆண்டவன்சொன்ன (கூ) தத்துவங்களின் வியாபாரம் தாங்கள் தெரிவிக்கவேண்டுமென்று கேட்க, சூதமுனிவர் அப்படியே சொல்லுகிறேனென்று தத்துவ உடற்கூறு சொல்லத்தொடங்கினார்:—

மேலாஞ் சதுட்ட சாதனங்கண் மேவிநிறைந்த பேர்க்குறைக்கின்
மேலாமதுநா மெனத்திடமாய் விளங்கு மவையில்லாதவர்க்கு
மேலாம்பரமன் மான்மழுவாய் விளங்கியுரைத்தும் விளங்காது
மேலாஞ்சாதனங்கண்வர மேவவேண்டுஞ்சாதுசங்கம்.

சொரூபநாமே யெனத்திடமாய்த் துணிந்தபேர்க ளில்லறத்தை
மருவிநீங்கா திருந்திடினு மற்றோர்க்குலறயு மவர்க்கில்லை
சொரூபநாமே யெனத்திடமாய்த் துணியாதவர்க ளில்லறத்தை
ஒருவி நீங்கி னதுகொண்டே யுளதோ முத்தி பவமறுமோ.

மித்தையதனைப் பற்றிடவும் விடவும் வேண்டா மிவ்வுலகை
மித்தையெனக் காண்குதல்போதும் விட்டுநீங்கி முடனொருங்கே
எத்தைவிடுத லெதைப்பற்ற லென்னிற் சீவத்துவமான
அத்தைவிடுக தனைநோக்கு மதைப்பற்றிடுக நெறியாகும். (மகாராஜா.)

எங்குஞ் சிவனிருப்ப னனுலு மாசற்ற
சங்கமத்துஞ் சற்குருவின் தன்னிடத்து மிலிங்கத்து
மாவினுடம் பெல்லாமு மாவரித்து நிற்கினும் பால்
ஆவுமுலைக்கண் மிகுதிப்பார்.

பிண்டமாமுடனு னல்லேன் பிராணவாயு நா னல்லேன்
கண்டவிந்திய நானல்லேன் கரணமோர் நான்கு மல்லேன்
பண்டயவறிவே நானென்றுணர்தரு பருவம் வாய்ப்பின்
வண்டறை கொன்றைத்தாரான் மலரடி காணலாமே.

(வள்ளலார்.)

ஐம்புல னடக்கலாலு மறிவினை யறிதலாலு
மின்பதுன்பங்க ளெல்லா மியல்பென வொறுத்தலாலுஞ்
செம்பொரு ளுறைதலாலுஞ் சிவோகம் பாவித்தலாலும்,
நம்பனை யகத்துணர்ந்த ஞானியென் றறியலாமே.

என்று மிருப்பினு மிறப்பது நிச்சயம்
பொன்னாட்டி னிந்திர னாயினும் பொன்றுவ
னன்னாட் கழியுமுன் ஞானத்தி னாலே
தன்னை லறிவது சற்குரு பாதமே. (வள்ளலார்.)

"மழித்தலு நீட்டலும் வேண்டா வுலகம்
பழித்த தொழித்து விடின்"

"வலியினிலைமை யான் வல்லுருவம் பெற்றம்
புலியின் றோல் போர்த்து மேய்ந்தற்று"

"தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று." (திருக்குறள்.)

வேட்டியுந் தாழ்வடமும் வெண்ணீறும் வெண்பல்லும்
காட்டுவது ஞானக் களவுகாண்—தேட்டமற்றோன்
பூரணன் காண் சிற்றறிவன் பொய்ப்பாச மென்றறிந்தா
ரோர்வடிவும் வார்த்தையு முண்டோ. (ஒழிவிலொடுக்கம்.)

சகலமு நாமரூபங்களின்றிச் சச்சிதானந்தமாய்க் காண்போன்
சகலசம்பன்ன னவன்பரமேசன் சற்குரு னவனலாதுளவோ
சகலமாமுனிவர் நீவிர் நாநெடுமால் சதாசிவன் மற்றுளோரெவருஞ்
சகலவேதங்கள் கலைகளினாலுஞ் சாற்றியு மவன்புகழ்முடியா.
(ஞானவாசிட்டம்.)

அறிவான வறிவகற்றி அறிவினுள்ளே யறிவுதனை
அருளினாலறியாதே யறிந்து குறியாதே
குறித்தந்தக் கரணங்க ளோடுங் கூடாதே வாடாதே
குழைந்திருப்பையாகிற்
பிரியாத சிவன்தானே பிரிந்துதோன்றிப்
பிரபஞ்ச பேதமெலாந் தானாகத்தோற்றி
நெறியாலே யவையெல்லா மல்லவாகி
நின்றென்றுந் தோன்றிடுவ நிரந்தரனாயே. (சிவஞானசித்தி.)

தன்னையறியாமற் றானே தனைத் தேட
வென்னபுதுமை யிது வென் சொல்வேன்—மண்ணுலகில்

தண்ணீரி னின்றுகொண்டு தாகந் தணியார்போல்
யெண்ணி மற்றே துரைப்போம் யாம்.

ஞானநூல் கற்றாலு நற்றறவு பூண்டாலு
மோனசமாதி முயன்றாலுந்—தானாகி
யெல்லாக் கலையு மற் றின்புற்றிருப்பதுவே
சொல்லாரு முத்திச்சுகம். (சொரூபசாரம்.)

ஞாலமதின் ஞானநிட்டை யுடையோர்க்கு
நன்மையிலை தீமையிலை நாடுவ தொன்றில்லை
சீலமில்லை தவமில்லை விரதமோ டாசிரமச்
செயலிலை தியானமிலை சித்தமில்லை
கோலமில்லை புலனில்லை கரணமில்லை
குறியில்லை குணமில்லை குலமுமில்லை
பாலருட னுன்மத்தர் பிசாசர்குணமருவிப்
பாடலினோ டாடலிவைப் பயின்றிடினும் பயில்வர்.
(சிவஞானசித்தி.)

ஏதேது வந்தாலு மேதேது செய்தாலும்
எதேதி லின்புற் றிருந்தாலும்—யேதேதுந்
தானாகா வண்ணந் தனியே தெரிந்திருக்கும்
ஞானாகாரந்தானே நாம். (சொரூபசாரம்.)

சடையினைப் பெருக்குந் தலையினைப் பறித்துஞ்
சீவரந் தாது நற்கலிங்க
முடையெனப் புனைந்து முடைகளைத் தவிர்த்து
முனுறக்கங்களைத் துறந்தும்
படியுநற்சருகும் வாயுவுமயின்றும்
பாரொடுகல்லிடைத்துயின்று
மிடை யதற்றுழலு மிவையருட்சொரூபன்
மெய்யருட் பெறுமவர்க் கியல்பே. (போதரத்நாகரம்.)

"நானற்ற போதத்தை நானனமுத்தியை
நாமெங்ஙனஞ் சொல்வ துந்தீபற
நான்மறைக் கெட்டாதென் றுந் தீபற."

"பதைத்தெழா துள்ளம் பதைப்பாய் பதைக்கில்
வதைப்பா யங்கங்கே யென் றுந்தீபற
மாயுமனப் பேயென் றுந்தீபற." (அவிரோதவுந்தியார்.)

"குடும்பபாரந்தலைக் கொண்டவர்க்கல்லல்
விடும்பரி சின்மையா லுந்தீபற
மெய்புணர் வெங்ஙனு முந்தீபற."

"எல்லோர்க்குங் காலன் துறவுகளியாமுன்
நல்லோர் துறப்பர் தாமுந்தீபற
நன்றறி வார்களென் றுந்தீபற." (அவிரோதவுந்தியார்.)

நடலை வாழ்வுகொண் டென் செய்தீர் நாணிலீர்
சுடலை சேர்வது சொற்பிர மாணமே
கடலி நஞ்சமு துண்டவன் கைவிட்டா
லுடலி னுர் கிடந்தூர் முனிபண்டமே. (அப்பர்சுவாமிதேவாரம்.)

## குருமுறை.

இயர்க்கைகுணஞ் சோதித்து முன்னே பின்னே
யாவையுமாம் பிரமம் நீயென்னல் வேண்டும்
வியப்புறவாசையி லுழல்வார்க் கிவ்வாறோதின்
மீளாத தீநரகில் வீழ்த்ததாகும்
தியக்குறு போகத்தாசை தீர்ந்துபுந்தி தெளிந்த
உனைப்போல்வார்க்கே திகழத் தோன்று
மயக்கமறவுணர்த்தவல்ல குருவைக் கிட்டா
வருந்தியுத்தன் பிறப்பறுக்கு மகனு மாங்கே. (ஞானவாசிட.)

தேகமுதற்பிரிவுகளாய்ச்சிறியனவாம்பொருள்களிலத்தெய்வமுண்டோ
பாகமறப்பணிதியறவடிமுடிவற்றுணர்வடிவே பரமபோதம்
ஆதலினுலதுதெய்வமருச்சித்தற் குரித்தாகுமறிவிலாத
மூர்க்கருக்குவடிவமுதலருச்சனையே பியல்பென்றுமொழியுமென்றே.
(ஞானவாசிட்டம்.)

சாத்திரஞ்சமையம்வேண்டார் தத்துவக்கத்தும்வேண்டார்
கோத்திரங்குலங்கள்வேண்டார் கூறுமால் விரதம் வேண்டார்
மூர்த்திசேவையுமேவேண்டார் முன்னவன் பூசைவேண்டார்
தீர்த்தமும்வேண்டார்ஞானச் சின்மயமானமேலோர்.
(பசுபதிபாசவிளக்கம்.)

எங்குஞ்சிவாலயமா மெங்குஞ்சிவமாகும்
எங்குஞ்சிவனடிமை யெங்குமாய்ப்பங்கறவே
நிற்றச்சிவபூசைநின்ற நிலையாய் நினைவிற்
பற்றொழிதல் பூசாபலம். (சிவானந்தமாலை.)

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஆனைமுக னாறுமுக னம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைமுன் னாடு.

நைமிசாரணியமுனிவர் கேட்டுக்கொண்டபடி சூதமுனிவர் தத்துவ உடற்கூறு (கூசு) ம், அதனதன் தொழில்களும் விரிவாக சொல்லுகின்றனர்.

# தத்துவதீபிகை.

தத்துவந் தொண்ணூற்றாறுந் தாழ்வில்லா தாயுமாக்கை
மெத்தென நாடிபத்தும் மெய்யுளே யாறுதாரஞ்
சுத்தமாங் கரணநான்குந் தோற்றுமண் டலங்கண் மூன்றும்
இத்தனை யறியவல்லா ரிறையவ ராகுந்தானே.

## முதல்தத்துவம் கூ௰ - க்கும் விவரம்.

### க - வது பூதம் ரு - க்கும் பெயர்.

| | | | |
|---|---|---|---|
| 1—க. | பிரிதிவு ... ... | என்பது ... ... | பூமி |
| 2—உ. | அப்பு ... ... | ,, ... ... | தண்ணீர் |
| 3—ரு. | தேயு ... ... | ,, ... ... | அக்கினி |
| 4—ச. | வாயு ... ... | ,, ... ... | காற்று |
| 5—ரு. | ஆகாயம்... ... | ,, ... ... | சுத்தவெளி |

### உ - வது பொறி ரு - க்கும் பெயர்.

| | | | |
|---|---|---|---|
| 6—க. | சுரோத்திரம் ... | என்பது ... ... | செவி |
| 7—உ. | துவக்கு ... | ,, ... ... | உடம்பு |
| 8—ரு. | சட்சு ... | ,, ... ... | கண் |
| 9—ச. | சிங்குவை ... | ,, ... ... | நாக்கு |
| 10—ரு. | ஆக்கிராணம் ... | ,, ... ... | மூக்கு |

### ரு - வது புலன் ரு - க்கும் பெயர்.

11—க. சத்தம் என்பது கேழ்க்கப்பட்ட செவிக்கு உயிற்கூறு
12—உ. ஸ்பரிசம் ,, சுகதுக்கமாகும் உடம்புக்கு உயிற்கூறு

13—ங. ரூபம் என்பது காணப்பட்டகண்ணுக்கு உயிற்கூறு
14—ச. இரசம் ,, அறுசுவையருந்தும் நாவுக்கு உயிற்கூறு
15—ரு. கந்தம் ,, நற்கந்தம் துற்கந்தங்க ளறியும் நாசிக்கு [உயிற்கூறு

ச - வது கர்மேந்திரியம் ரு - க்கும் பேயர்.

16—க. வாக்கு ... என்பது ... ... வாய்
17—உ. பாதம் ... ,, ... ... கால்
18—ங. பாணி ... ,, ... ... கை
19—ச. பாயுரு ... ,, ... ... அபானம்
20—ரு. உபஸ்தம் ... ,, லிங்கம் அல்லது பெண்குறி

ரு - வது கர்மவிடயம் ரு - க்கும் பேயர்.

21—க. வசனம் என்பது வார்த்தை வசனிப்பது வாய்க்கு உயிற் [கூறு
22—உ. கௌவணம் ,, நடைநடத்திவைக்கும் கால்கட்கு உயிற் [கூறு
23—ங. தானம் ,, கொடுக்கல் வாங்கல் செய்யுங்கைக்கு [உயிற்கூறு
24—ச. விசற்கம் ,, மலம் நீக்கும் அபானத்திற்கு உயிற்கூறு
25—ரு. ஆனந்தம் ,, விந்துநாதம் விடுதல் லிங்கத்திற்குஉயிற் [கூறு

சா - வது அந்தக்கரணம் ச - க்கும் பேயர்.

26—க. மனம் என்பது ஒன்றை நினைக்கும்
27—உ. புத்தி ,, அதனை விசாரிக்கும்
28—ங. சித்தம் ,, அதனை தீர்மானித்து செய்யச்செய்யும்.
29—ச. அகங்காரம் ,, அதனைக்கொண்டு மேன்மேலெழும்பி [முடிக்கும்.

எ - வது அறிவு ஒன்றுக்கே பேயர்.

30—க. உள்ளம் என்பது அறிவு தன்னைக் கண்டு மகிழ்ந்திருக்கும்.

ஆக முதல் தத்துவம் ஙО - ம் முற்றும்.

## நடுத்தத்துவம் ௧௰ - க்கும் விவரம்.

### ௮ - வது நாடிகள் ௧௰ - க்கும் பெயர்.

| | | | |
|---|---|---|---|
| 31—௧. | இடகலைநாடி | என்பது | வலதுகாற் பெருவிரலில் நின்று கத்திரிகை மாறலாக இடது நாசியைப்பற்றி நிற்கும். |
| 32—௨. | பிங்கலைநாடி | ,, | இடதுகாற்பெருவிரலில் நின்று கத்திரிகை மாறலாக வலது நாசியைப் பற்றி நிற்கும். |
| 33—௩. | சுழிமுனைநாடி | ,, | மூலாதாரத்தில் தோன்றி சகல நாடிகட்கும் ஆதாரமாக நடுவே நடுநாடியாகச் சிரசளவு முட்டி நிற்கும். |
| 34—௪. | சிங்குவைநாடி | ,, | மூலாதாரத்தில் தோன்றி உண்ணாக்கில் நின்று அன்னமுஞ் சலமும் விழுங்கப்பண்ணும். |
| 35—௫.<br>36—௬. | புருடநாடி<br>காந்தாரிநாடி | ,, | இவ்விரண்டு நாடிகளும் மூலாதாரத்தில்தோன்றி வலதுஇடதுகண்ணளவாய் நின்று மெய்ம்மறந்தபோதுஞ் * சமமாய் அசைவற்று நிற்கும். |
| 37—௭.<br>38—௮. | அஸ்வனிநாடி<br>அலம்புடைநாடி | ,, | இவை மூலாதாரத்தில் தோன்றி, அஸ்வனிநாடிவலதுகாதளவிலும், அலம்புடைநாடி இடதுகாதளவிலுமாய் நின்று சத்தத்தைக் கேழ்க்குவிக்கும். |
| 39—௯. | சங்கினிநாடி | ,, | மூலாதாரத்தில் தோன்றி, லிங்க உபஸ்தங்களைப் பற்றிநின்று ஒரு நாடியையும் மிஞ்ச வொட்டாமல் நிற்கும். |
| 40—௧௰. | குகுதநாடி (பித்தம்) | ,, | மூலாதாரத்தில் தோன்றி நாபியில் நின்று சரலைப்பற்றிக் குடலைப் புரட்டி வாய்நீர்சுழட்டிவைக்கும். |

### ௯ - வது வாயுக்கள் ௧0 - க்கும் பெயர்.

41—௧. பிராணவாயு—மூலாதாரத்தில் தோன்றி சித்ரநாடியில் விழுந்து ஓ0-என்னு மூலாதாரத்திலே யுதித்து, அவ் என்று நாடித்தானத்தில்முட்டி பௌ0 - என்று இடபிங்கலையிலே யோடி கபாலத்தைச்சுற்றி நாசியினாலே பன்னிரண்டங்குலம் புறப்பட்டு நாலங்குலங் கழன்று (பாழாகி) எட்டங்குலம் மீண்டுந் தானெழுந்தவிடத்தில் போய்த்தாக்கும். இப்படி நாழிகை யொன்றுக்குச் சுவாசம் ௩௬0 - ஆக இரவுபகல் நாழிகை ௬0 - க்குஞ் சுவாசங்கள் (௨௧௬00). இதற்கு விபரம் வருமாறு காண்க:—

| | | | |
|---|---|---|---|
| மூலாதாரத்தில் சுவாசம்... | ... | ௬00 | 600 |
| சுவாதிஷ்டானத்தில் சுவாசம் | ... | ௬000 | 6,000 |
| மணிபூரகத்தில் சுவாசம்... | .... | ௬000 | 6,000 |
| அனாகதத்தில் சுவாசம் ... | ... | ௬000 | 6,000 |
| விசுத்தியில் சுவாசம் ... | ... | ௧000 | 1,000 |
| ஆக்கினையில் சுவாசம் ... | ... | ௧000 | 1,000 |
| நாதாந்தத்தில் சுவாசம் ... | ... | ௧000 | 1,000 |
| ஆக சுவாசங்கள் நாள் ஒன்றக்கு- | | ௨௧,௬00 | 21,600 |

இதில், பாழாக வெளியிற்பாய்ந்து

| | | | |
|---|---|---|---|
| நாசமாய்ப் போகுஞ் சுவாசம் | ... | ௭௨,00 | 7,200 |
| உள்ளேபுகுஞ் சுவாசம் ... | ... | ௧௪,௪00 | 14,400 |
| ஆகமொத்த சுவாசம்- | | ௨௧,௬00 | 21,600 |

42—௨. அபானவாய்வு:—மூலாதாரத்தில் தோன்றி, குய்யத்தையுங் குதத்தையும்பற்றிநின்று மல சலாதிகளைக் கழிப்பிக்கும்.

43—௩. உதானவாய்வு:—மூலாதாரத்தில்தோன்றி உதிராக்கினியை எழுப்பி உண்டவகைகளின் சாரங்களைச் சகல நாடி நரம்புகட்கும் ஊட்டுவித்து உடலை வளர்ப்பிக்கும்.

44—௪. வியானவாயு:—மூலாதாரத்தில் தோன்றி தோளிலேநின்று மிகக் களையுந் தாசமும் உண்டாக்குவிக்கும்.

45—ரு. சமானவாயு:—மூலாதாரத்தில் தோன்றி, வாதபித்தசிலேட்டுமங்களை மிஞ்சவொட்டாமலுஞ் சகல வாய்வுகளையும் ஏற்றக்குறைச்சல் செய்யவொட்டாமலுஞ் சமானமாய்க் கீழ்க்கொண்டியங்கும்.

46—சு. நாகன்வாயு:—மூலாதாரத்தில் தோன்றி, தொக்கு - என்பு - கண்டம் முதலிய விடங்களில் நின்று கொட்டாவி, விக்கல், வியர்வை வெளிப்படுதல் இவைகளைச்செய்யும்.

47—எ. கூர்மன்வாயு:—மூலாதாரத்தில் தோன்றி, கண்களில்நின்று இருவிழிகளையும் இமைப்பிக்கும்.

48—அ. கிருதரன்வாயு:—மூலாதாரத்தில்தோன்றி, புருவமத்தியில் நின்று தும்பல், அழுகையைச்செய்யும்.

49—கூ. தேவதத்தன்வாயு:—மூலாதாரத்தில் தோன்றி, விழிக்கும் போது வாக்கில் நின்று வசனஞ்செய்தும்; ஓட்டிவித்தும், உலாவிவித்தும், உயித்தியம் பண்ணுவிக்கும்.

50—க௦. தனஞ்செயன்வாயு:—மூலாதாரத்தில் தோன்றி, சித்ரநாடியில்விழுந்து பிராணன், தேகத்தைவிட்டு நீங்கியும், தான் நீங்காமல் வீங்கவைத்தும் விரியவைத்தும் மூன்றுநாளிற் கபாலத்தைப்*பிளந்துகொண்டு ஓடிப் போகும்.

### க௦ - வது வசையங்கள் ரு - க்கும் பெயர்.

51—க. அமாவசையம் என்பது அன்னமுஞ் சலமு மிறங்கச்செய்யும்
52—உ. பருவசையம் ,, மேற்கூறியதைப் பிரிக்கும்.
53—ந. மலவசையம் ,, மலக்குழியி லிறங்கச்செய்யும்.
54—ச. சலவசையம் ,, சலக்குழியி லிறங்கச்செய்யும்.
55—ரு. சுக்கிலவசையம் ,, சுக்கிலம் சுரோணிதம் பிரியச்செய்யும்.

### கக - வது கோசங்கள் ரு - க்கும் பெயர்.

56—க. அன்னமயகோசம் என்பது சட்பாக விகாரமாகத் தோற்றுந் தூலதேகமே அன்னமயகோசம்.

57—உ. பிராணமயகோசம் என்பது பிராணனுங் கர்மேந்திரியமுங் கூடியது பிராணமயகோசம்.

58—௲. மனோமயகோசம் என்பது மனதுங் கர்மேந்திரியமுங் கூடியது, மனோமயகோசம்.

59—௬. விஞ்ஞானமயகோசம் என்பது புத்தியும் ஞானேந்திரியமுங் கூடியது விஞ்ஞானமயகோசம்.

60—௫. ஆனந்தமயகோசம் என்பது காரண சரீரமே ஆனந்தமயகோசம்.

நடுத்தத்துவம் ௩௦ - ம் முற்றும்.

## கடைத்தத்துவம் ௩௬-க்கும் விவரம்.

### கஉ - வது ஆராதாரம் ௬ - க்கும் பெயர்.

61—௧. மூலாதாரம் என்பது குய்யத்திற்குங் குதத்திற்கும் நடுவே பவித்திரத்தானமாய் நாலிதழுடையதாய் முக்கோணமாயிருக்கும். இதநடுவே நிற்கும் எழுத்து ஓங்காரம் அதில் வசிக்குங்கடவுள் ஸ்ரீ கணேசமூர்த்தியும் வல்லையும். இதற்கு இரண்டங்குலப் பிரமாணத்திற்குமேல்,

62—௨. சுவாதிஷ்டானம் என்பது ஆறிதழுடையதாய் நாற்கோணமாயிருக்கும். இதநடுவே நிற்கும் எழுத்து நகரம். அதில் நிற்குங்கடவுள் பிரமன். இதற்கு எட்டங்குலப் பிரமாணத்திற்குமேல்,

63—௩. மணிபூரகம் என்பது பத்திதழுடையதாய்ப் பிறைகோணமாயிருக்கும் இதநடுவே நிற்கும் எழுத்து மகரம். அதில் நிற்குங்கடவுள் ஸ்ரீ மகாவிஷ்ணுவும் லட்சுமிதேவியுமாம். இதற்குப் பத்தங்குலப் பிரமாணத்திற்குமேல்,

64—௪. அநாகதம் என்பது பன்னிரண் டிதழுடையதாய் இருதயத்தானமாய் முக்கோணமாயிருக்கும். இதநடுவே நிற்கும் எழுத்து சிகரம். அதில் நிற்குங்கடவுள் ஸ்ரீ சிவபெருமானும் பார்வதாதேவியும். இதற்குப் பத்தங்குலப் பிரமாணத்திற்குமேல்

65—௫. விசுத்தி என்பது பதினாறிதழுடையதாய் அறுகோணமாயிருக்கும். இதநடுவேநிற்கும் எழுத்து வகரம். அதில் நிற்குங் கடவுள், ஸ்ரீமகேசுவரனும் மகேஸ்வரியும். இதற்குப் பன்னிரண்டங்குலப் பிரமாணத்திற்குமேல்,

66—சு. ஆக்கினை என்பது நாசிமுனைக்குமேல் புருவமத்தியில் இரண்டிதழுடைத்தாய் வட்டமாயிருக்கும். இதநடுவே நிற்கும் எழுத்து யகரம். அதில் நிற்குங்கடவுள், ஸ்ரீ சதாசிவமூர்த்தியும், மனோன்மணிதேவியும். (இவரருளால் மேலானதை அறியவேண்டும்.)

---

கரு - வது மண்டலம் ௩ - க்கும் பெயர்.

67—க. அக்கினிமண்டலம் என்பது ஆக்கினைக்குமேல் நாற்சதுரமாய் நடுவே முக்கோணமாய் பிரிதிவும் அப்புங்கூடின இடத்தில் நாலிதழுடையதாய் ஒருபுட்பமாஇருக்கும்.

68—உ. ஆதித்தமண்டலம் என்பது இருதயகமலமாய் அறுகோணமாய் எட்டிதழுடையதாய் ஒரு புட்பமாயிருக்கும். இதில் வாழைப்பூபோன்றது கீழ்நோக்கிநிற்கும்.

69—௩. சந்திரமண்டலம் என்பது ஆயிரங்கோடி, கோடாகோடி சந்திரன் உதயமானாற்போல், சிரசு நடுவே மூலாதாரந்தொடங்கி ஓம் என்ற அட்சரத்தை முன்னிட்டுப் பேதித்து நிற்கும், அந்த அமிர்தகலை அக்கினி மண்டலத்தை மேல்நோக்கிச்சோதியாய் நிற்கும். இத நடுவே, பராசத்தி சுந்தரானந்த வாலையாக எழுந்தருளி இருப்பள்.

கச - வது மலம் ௩ - க்கும் பெயர்.

70—க. ஆணவம் என்பது இது, உடம்பை யானென்று இறுமாப்புடனிருக்கும்.

71—உ. காமியம் ,, இது, கண்டவஸ்துவை இச்சிக்கும்.

72—௩. மாய்கை ,, இது, தனக்குப்பின்னால் வருவதை உணராதுகோபங்கொண்டுபந்தப்படும்.

---

கரு - வது தோஷம், அல்லது பிணி ௩ - க்கும் பெயர்.

73—க. வாதம் என்பது வாயுவின் கோபம், அல்லது கொதிப்பு.

74—உ. பித்தம் ,, அக்கினியின் கோபம், அல்லது கொதிப்பு.

75—௩. சிலேஷ்மம், அப்புவின்கோபம், அல்லது கொதிப்பு. இம்மூன்றின்தொந்தகோபத்தினாலே, சகல வியாதிகளும் உண்டாகும்.

## ௧௬ - இச்சை ௩ - க்கும் பெயர்.

76—௧. அர்த்தஇச்சை என்பது தனத்தைத்தேடி ஆசைப்படுவது
77—௨. புத்திர இச்சை ,, புத்திரரைநாடி ஆசைப்படுவது
78—௩. உலக இச்சை ,, உலகவிஷயங்களைநாடி ஆசைப்படுவது

## ௧௭ - வது குணம் ௩ - க்கும் பெயர்.

79—௧. இராஜதகுணம் என்பது வெட்டவுங் குத்தவுங் கடிக்கவு மிருப்பது.

80—௨. தாமதகுணம் ,, மந்தமாய் உன்மத்தமாய் மத்தி பமாயிருப்பது.

81—௩. சாத்விக குணம் என்பது அடக்கம், அன்பு, விவேகம், ஐம்பொறி யடக்கல், அருள், ஞானம், தவம், பொறை, மேன்மை, வாய்மை, இவையுடையதாய் நாட்டங்கொண்டு நிற்பது.

## ௧௮ - வது இராகம் ௮ - க்கும் பெயர்.

82—௧. காமம் என்பது சகலவஸ்துக்களிலும் இச்சை.
83—௨. குரோதம் ,, சினம், பிணக்கு.
84—௩. உலோபம் ,, ஈயாமை, பிடிபாடு.
85—௪. மோகம் ,, யாவற்றிலும் மோகித்தல், ஆசை மயக்கம்.
86—௫. மதம் ,, செருக்கு, கெர்வம்.
87—௬. மாச்சரியம் ,, உறவாயிருந்து உட்பகை விளைத்தல் பொறாமை.
88—௭. இடும்பை ,, உதாசனித்தல், அவமதிப்பு.
89—௮. வேட்கை ,, பலவிதமான ஆசை, அல்லது, அவதூறு.

### ககூ - வது இருவினை உ - க்கும் பெயர்.

90—க. நல்வினை என்பது புண்ணியஞ்செய்து நன்னடத்தையாக அறியவேண்டியதை அறிதல்.

91—உ. தீவினை ,, பாவஞ்செய்து மேற்சொல்லிய நடத்தையை அறியாதிருத்தல்.

### உ0 - வது அவத்தை ரு - க்கும் பெயர்.

92—க. சாக்கிரம் என்பது லலாடத் தானமே சாக்கிராவத்தை.

93—உ. சொப்பனம் ,, கண்டத் தானமே சொப்பனுவத்தை.

94—ங. சுழுத்தி ,, இருதயத் தானமே சுழுத்தியாவத்தை.

95—ச. துரியம் ,, நாபித் தானமே துரிய யவத்தை.

96—ரு. துரியாதீதம் ,, இலிங்கத்தானமே துரியாதீத யவத்தை.

மேற்கூறிய சாக்கிரமானது லலாடத்தானத்திலே, சத்தம்,ஸ்பரிசம்,ரூபம், இரசம், கந்தம், வசனம், கமனம் தானம், விசர்க்கம், ஆநந்தம், மனம், புத்தி, சித்தம், அகங்காரம், ஆகிய கச - கருவிகளுடனே இராஜசந்நிதானத்திற் சேவிக்கத்தகுந்த காவலர்களைப்போல் அப்புலன்கள் நிற்கும்.

இப்பால், மேற்கூறிய 14 - கருவிகளில். சத்தம் முதல் ஆநந்த மீருகிய 10 - ம், லலாடத்தானத்திலே ஒடுங்கி, நான்கு கரணமுங் கண்டத்தானத்தில் நிற்பது சொப்பனம்.

அப்பால், மேற்கூறிய நான்கு கரணத்திலே, இரண்டு சொப்பனமாகிய கண்டத்தானத்தில் ஒடுங்கி மிகுந்த இரண்டும் இருதயத்தானத்திலே நிற்பது, சுழுத்தியாகும்.

அதற்குமேல், இரண்டுகரணத்தில் ஒன்று, துரியமாகிய நாபித்தானத்திலும், மற்றொன்று துரியாதீதமாகிய இலிங்கத்தானத்திலுமாக ஒடுங்கி ஆண்டவ னுக்கினைக்கு எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்.

இந்த வேதாந்த தத்துவம் இருபத்தெட்டில்

| | | |
|---|---|---|
| சகள வடிவமான அசித்துருவ தத்துவம் | ... | 24 |
| நிட்கள வடிவமான சித்துருவ தத்துவம் ... | ... | 4 |

### ஆகதத்துவம் (28)க்கு விவரம்.

| | | |
|---|---|---|
| சுரோத்திராதி ஞானேந்திரியம் | ... | 5 |
| வாக்காதி கன்மேந்திரியம் | ... | 5 |

| | |
|---|---|
| சப்தாதி இந்திரியங்கள் | ... 10 |
| மனமாதி அந்தக்கரணங்கள் | ... 4 |
| ஆக தத்துவம் | 24 |

| | |
|---|---|
| சித்துருவ தத்துவமென்பது. புருடன், காலபரம், வியோமம், பரம, ஆக தததுவம் | ... 4 |
| ஆகமொத்த தத்துவம்... | 28 |

இநத 28 - தததுவமே, ஜக-ஜீவ-பரம், என மூன்றுபொருளாய் விளங்கும் அது எப்படியெனில்:—

24-தத்துவமும் சகமாகவிளங்கும்: புருடன், காலபரம், வியோமம், இம்மூன்றும் ஜீவனாகவிளங்கும்: பரம் ஒன்றுமே சிவமாக விளங்கும்: இதுவே தத்துவதரிசனமாம.

புருடனென்பது—ஆன்மா.
காலபரமென்பது—சிவம்.
வியோமமென்பது—ஆகாயம்.

இப்படி தத்துவங்களை அறிந்து பிரமமே தானென்றும் மற்ற முப்பத்தைந்து தததுவமுந் தனக்கந்நியமென்றும் பிரித்தறியாத அவிவேகிகள் அகங்காரக்கிரநதியினாலே, புத்திர தாராதிகள் தவிக்கின்றதைத் தான்கண்டு தவிக்கின்றோமென்கின்ற மூடகரம்போலிந்த இருபத்தெட்டினுடைய தொழிலையுந் தன்தொழிலென்று மயங்குகின்றபடியினால் இந்த இருபத்தெட்டு தத்துவங்களினாலும் ஆர்ச்சிக்கப்பட்ட புண்ணிய பாவங்களினாலும் கட்டுப்பட்டு அந்தக் கன்மத்தின்படியே சனனமரணாதி சமுசாரத்தில் அடிபடுகின்றோமென்று மயங்குவன். சிரவணாதிவிசாரணையினால் பிரம்மசைதன்யமே தானென்றும் மற்றமுப்பத்தைநது தத்துவங்களுந் தானல்லவென்றுந் தெளிந்தவிவேகிக்கு அகங்காரக்கிரந்தி யற்றபடியினால் இந்தஇருபத்தெட்டினுடைய தொழிலுக்கும் சாக்ஷியாயிருக்கின்ற தான் புசித்தவனல்லவென்றும் திடப்படத்தேறி மயக்கமற் றிருக்கின்றபடியினால் இந்த இருபத்தெட்டு தத்துவத்தினாலும் ஆர்ச்சிக்கப்பட்ட புண்ணியபாவங்களாகிய ஆகாமிய சஞ்சிதங்களை, உணர்ந்த ஞானாக்கினியால் தகித்ததனால் கன்ம மடிந்துபோய் சனனமரணாதி சமுசாரமில்லாமல் முக்தனாகி பிரமமாத்திரமாகவே யிருப்பன்.

இவனைச் சீவன்முத்தனென்றும் திடப்பிரக்ஞனென்றும், அதிவர்ணாசிரமியென்றும், குணாதீதனென்றும், பகவத்பத்தனென்றும், பிராஹ்மணனென்றும் சொல்லுகின்ற இந்த ஆறையுஞ் சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. ஆகையால், சகலரும் இந்தத் தத்துவஞானத்தை விசாரம்பண்ணி மோக்ஷமடையக் கடவர்கள். இந்தவிரிவான (96)தத்துவங்களில் (60) கழித்து (36) தத்துவங்களாகவும் அதினும் (8)தத்துவங்கழித்து மிச்சம் (28) தத்துவம் முக்கியமானதென்றும் பெரியோர்கள் எடுத்திருக்கின்றார்கள்.

இத்தத்துவங்க ளெல்லாஞ் சடங் தம்மைத் தாமறியாச்
சித்துறுநா மென்று சிறுதத்தை கைத்தலமாக்
காண்பதுவே காட்சி இதை கைக்குண்மா நெல்லியெனக்
காண்பதுநீ மாணுக் கடை.

"ஊனை யொதுக்கி யுணர்வாக்கி விட்டபின்
நானே பிரமமென நாடு."

"சொப்பனமுஞ் சாக்கிரமுந் தொலையொத்த காலத்துச்
சுப்பிரம மென்றுநீ சொல்."

"துறந்துஞ் சிவயோகந் துன்னாத மூடர்
பிறந்தும் பிறவா தவர்."

"பதைத்தெழு முள்ளப் பதைப்பைப் பரித்து
மதத்தை யொடுக்குநீ யறிந்து." (வள்ளலார்.)

சைவநன்நெறியுந் தந்திரமவையுந்
தற்பரன் முகத்தினின் றுதிக்குந்
துய்யவைதீகமும் மறையவையதையுஞ்
சுவாசமற் றதனி னின் றுதிக்கும்
உய்யுமச் சிவாத்துவித நெறியதுவு
முபநிடதமும் உளத்தினி லுதிக்கும்
ஐயமுந் திரிபு மறவிவைக் கருத்த
மறைந்திடுந்தத்துவ மசியே." (மகாராஜா துறவு.)

பிரகாசிக்கின்ற இருபத்தெட்டாகமங்களும், கிரியாமார்க்கத்தை இலக்கமாகச் சொல்லும் சதுர்வேதங்களும் அருமையாகிய நல்ல உபாசனாமார்க்கத்தைச்சொல்லும்.முப்பத்திரண்டு உபநிஷத்துக்களும் உரித்தாகிய வைதீக ஞானமார்க்கத்தைப் பூரணமாகச் சொல்லும். ஆதலால், கிரியாமார்க்கம் (தொம்பதமும்) உபாசனாமார்க்கம் (தத்பதமும்) நாசமில்லாத ஞானமார்க்கம் (அசிபதமும்) ஆகும்.

சைவமார்க்கமும், இருபத்தெட்டாகமங்களும், பரமசிவத்தின் முகத்திலிருந்து தோற்றியும், பரிசுத்தமானவைதீக ஞானமார்க்கமுஞ் சதுர்வேதங்களுஞ் சுவாசத்திலிருந்து தோற்றியும், உச்சீவிக்கின்ற அந்த சிவாத்துவித மார்க்கமும் முப்பத்திரண்டு உபநிஷத்துகளும் இருதயத்திலிருந்து தோற்றியும், இவற்றுக்குச் சந்தேக விபரீதங்கள் அகலும்படி, (தத்துவமசி)யென்று வேதவாக்கியமானது மூன்றுபத அருத்தத்தைப்போதிக்கும்.

இந்தக் காரியஉபாதியாகிய (35) தத்துவங்களுங்கூடிய தேகம் எப்படித் தானல்லவெனில், என் தனம் என் தான்யம் என் குதிரை என் வஸ்திரம் என் வீடு என்னுடைமையாதி யென்பதுபோல்; என் தேகம் என் இந்திரியம் என்பிராணன் என்மனம் என்புத்தி என்சித்தம் என் அகங்காரம் என்று தன்னாலறியப்படுவதால் இவைகளும்; அந்தக்கரணங்களின் தொழில்களாகிய, ஐயம் துணிபு அபிமானம், சிந்தனை ஆகிய இவைகளும் தானல்ல.

ஆனால், தான் யாரெனவென்றால் முன்சொல்லிய ஏழுபாதியாகிய மூன்றுதேகத்தையும் இதுவிதுவெனப் பகுத்தறிந்திருக்கின்ற அறிவுக்கறிவாகிய ஆத்மாவே தானென்று உணர்வதே சொரூபமாகும்.

வேதமோதிலென் சாத்திரங்கேட்கிலென்
நீதிநூல்பல நித்தல் பயிற்றிலென்
ஓதியங்கமோ ராறுமுணரிலென்
ஈசனையுள்குவார்க் கன்றி யில்லையே.

தன்னிற்றன்னை யறியுந் தலைமகன்
றன்னிற்றன்னை யறியிற் றலைப்படுந்
தன்னிற்றன்னை யறிவில னாகிடிற்
றன்னிற்றன்னையுஞ் சார்தற் கரியனே.

ஞானத்தாற்றொழு வார்சிலஞானிகண்
ஞானத்தாற்றொழு வேனுனைநானலேன்
ஞானத்தாற்றொழு வார்கடொழக்கண்டு
ஞானத்தானுனை நானுந்தொழுவனே.

தத்துவந்தலைக் கண்டறிவாரிலைத்
தத்துவந்தலைக் கண்டவர்கண்டிலர்
தத்துவந்தலை நின்றவர்க்கல்லது
தத்துவனல்லன் றண்புகலூரனே. (அப்பர்சுவாமிகள் தேவாரம்)

மனமுதலான கரணமெலாமாயவருள்செய்தாராணையாணை
நனவிலுங்கனவிலுஞ்சுழுத்தியிலும்நானேதானுனேனென்றுடாய்பாம்பே.

(தத்துவராயசுவாமிகள் பாடுதுறை.)

ஒருகூறு மலமாகும் ஒருகூறு மனமாம்
ஒருகூறுடம்பாகும் உண்டற்ற வன்னம்
இருகூறும் நீயாகிலொருகூறும் நீயாம்
இழிக்கும் மலஞ்சேரிடப்பட்ட வுடலே.

கடக்குஞ் சாம்பண்ணி யுண்ணின் றொருத்தன்
கைபாத கன்னங்கள் மெய்போ லியக்கும்
கிடக்கும் நடத்தா விடத்தில் வுடம்பும்
கிடக்கும் வொருத்தன் னடத்தா விடத்தே. (சசிவர்ணபோதம்.)

நன்னாரிற்பூட்டிய சூத்திரப்பாவை நன்னாற்றப்பினுல்
தன்னாலுமாடிச் சலித்திடுமோ வத்தன்மையைப்போ
லுன்னாலியானுந் திரிவதல்லால் மற்றுனைப்பிரிந்தால்
என்னாலிங் காவதுண்டோ விறைவாகச்சி யேகம்பனே.

(பட்டினத்துப்பிள்ளையார்.)

## உபரதி வைராக்கியம் ஞானம் என மூன்றுகும்.

அவற்றுள் உபரதியென்பது பெண்டு பிள்ளை பண்டபதார்த்தங்களிலே யான் எனதென்கிற அபிமானம் நீங்கினதற்கு உபரதி யென்றும், அவைகளில் திரும்பி நோக்காமலிருப்பதற்கு வைராக்யம் என்றும் பெயர். ஞானமில்லாமல் உபரதி வைராக்கிய மாத்திரமுண்டானல் அவர்களுக்கு முக்தியில்லை.

## வைராக்கியம்.

இந்த வைராக்கியமுடைய ஒருவருக்கு ஞானமும் உபரதியுமில்லாமல் வைராக்கியமாத்திர முண்டானாலும், ஞானமில்லாமல், உபரதி வைராக்கிய முண்டானாலும், அவருக்கு இகலோகத்தில் புகட்சியும், சரீராந்தத்தில் பரத்திலே பிரம்மலோகாதியும் உண்டாகும். அவன் அனேககாலஞ்சென்று மீண்டு, நல்ல சுகமான சனனமும் யோகஞான சாதனையுடையோரை யடைந்து முத்தியும்பெறுவன்.

## ஞானமாவது.

ஆத்ம சொரூபத்தை குருவினுல் தேர்ந்தறிவதே ஞானம். அது சமஸ்காரபலத்தினுல் ஒருவருக்கு ஞானம் வைராக்கியம் உபரதி

இம்மூன்றுங் கூடியிருக்கும்; ஒருவருக்கு உபரதியும் ஞானமுங் கூடியிருக்கும்; ஒருவருக்கு வைராக்கியமும் ஞானமுங்கூடியிருக்கும்; ஒருவருக்கு வைராக்கியமும் உபரதியுமில்லாமல், ஞானமாத்திரம் பொருந்தியிருக்கும்; இவர்கள்சர்க்குணத்தோடும் சதாசாதனத்தோடும் பழிப்பின்றி பூஜிதை பொருந்தியிருப்போர். அவர்கள்பெருமை இவ்வாறென்று வாயாலளவிட்டுச் சொல்லக்கூடாததாகிய ஒப்பற்ற புகழும் மோக்ஷமு முண்டாகும்.

## ஞானப்பழக்கத்திற்கு.

சிரவண, மனன, நிதித்தியாசனம் பண்ணவேண்டும் இந்த சிரவணத்திலே தேகேந்திரியாதி பிரபஞ்சத்தையும், ஆத்மசொரூபத்தையும் பகுத்து அந்த அத்வைத பிரத்தியேகாத்மசொரூபமே தானென்றும், இந்த தேகேந்திரியாதி பிரபஞ்சம் தானல்லவென்று அறிவதும், இந்தப்பிரபஞ்சம் தோன்றப்பட்டபோதும், சுழித்தியில் தானிருந்ததுபோல் தனக்கு இல்லையென்றும், புத்தியில் திருஷ்டி நிச்சயம் வருகிறதே ஞானத்திற்குசொரூபம். மறுபடியும், இந்த சொரூபமான தேகேந்திரியாதிகள் தானென்று வராமலிருப்பதே விவேகஞானம்.

அஞ்ஞானகாலத்தில் தேகேந்திரியாதிசங்கம் தானென ஆணவ ஊர்த்துவ நிச்சயமாயிருந்ததுபோல் அந்தபுத்தி யெவ்வளவும் வாராமல் அத்வைத ஆத்மசொரூபமே தானென்று அழுத்தமாய் திடநிச்சயம் வருகிறதே ஞானத்திற்கு அவதிபலம் மேட்சம்.

மோட்சத்தை யடைவதற்கு இந்த மூன்றும் பிரதானமாய் வேண்டியதோவெனில் சாதனக்கிரமங்களை அபேட்சிக்காமலே பிரத்தியட்சமாய் மோட்சத்தை யடைகிறபடியினால் ஞானமொன்றே பிரதானம்.

வைராக்கிய உபரதியிரண்டும் பூரணமாயிருந்தாலும், ஞானமில்லாவிட்டால் அவர்களுக்கு மோக்ஷமில்லை ஆனால் மேற்சொல்லிய இவ்விரண்டும் ஞானத்திற்குச் சாதனமாயிருக்கும். உபரதி வைராக்கியஞானம், இம்மூன்றும் ஒருபுருஷனிடத்திலிருக்குமேயானால், மகாதபோபலமாம். ஒவ்வொருபுருஷனிடத்திலும் கர்ம்மவசத்தினால் ஒவ்வொன்றுமில்லாமலிருக்கும். எந்தப்புருஷனுக்கு உபரதி வைராக்கியம் பூரணமாயிருந்தும், ஞானம் ஒன்றுமாத்திரமில்லாவிடில் அவனுக்கு மோட்சமில்லை. எந்தப்புருஷனுக்கு, உபரதிவைராக்கிய மில்லாமல், பிரம்மஞானமாத்திரம் பூரணமாயிருந்தால் அவனுக்கு மோட்சமே சித்தமென்று சுருதிகள் வாதித்துக்கொண்டிருக்கும்.

ஆயினும் உபரதி வைராக்கியம் வியர்த்தமாய் போகுமோவெனில் போகாது. இவ்விரண்டும் தபசுவானபடியால் புண்ணியலோகப் பிராப்தி சித்திக்கும். இதனு லிந்த ஞானத்திற்கு பிரயோசன மென்னவென்றால், பிராரத்வகர்மம் நானுவித மானபடியினுல் ஞானிகளுடையவியாபாரமும் நானுவிதமாயிருக்கும். அதனுல்விவேகிகளான பேர்கள் தங்களுடைய வியாபாரங்களைப்பார்த்து சாஸ்திரங்களிப்படி சொல்லுகிறதென்று இவர்களுடைய வியாபாரமுமிப்படி யிருக்கிற தென்று பிரமிக்காமல் 'சாஸ்திரவிசாரணையும் விடாமல் அவரவர்கள் கர்ம்மவசத்தினுல் நானுவித வியாபாரத்தோடு கூடியிருந்தாலும் ஞானமும், ஞானத்திற்கு பல்மான மூக்தியும் சமானமென்று வேதாந்தசாஸ்திரம் சித்தாந்தம்

"பேதகர்ம்மத்தால் வந்த பிராரத்வ நானுவாகும்
ஆதலால் விவகாரங்க ளவரவர்க்காகவாகும்
யாதவஞ்செயினுஞ் செய்வர் வாணிபஞ் செயினுஞ் செய்வர்
பூதலம் புரப்பாரையம் புகுந்துண்பார ஜீவன்முத்தர்" (கைவல்லியம்)

அஞ்ஞான மாவது தன்னை கரசரணுதி அவயவா காரமாகிய தேகமே தானுக வறிந்ததேயாம்.

ஞானமாவது தத்துவ விசாரணையினுல் கண்ட தன்னை பிரம்ம சொரூபமாக வறிந்ததேயாம்.

இந்தப் பிரம்மமாகிய சைதன்னியம் தேகத்தோடு சப்தவித சைதன்யமாக கருவிகரணுதிகளோடுங் கூடி நிற்கின்றது. அதாவது:—

1. சுத்த சைதன்னிய மென்றும்,
2. ஈஸ்வர சைதன்னிய மென்றும்,
3. சீவ சைதன்னிய மென்றும்,
4. பிரமாத்துரு சைதன்னிய மென்றும்,
5. பிரமாண சைதன்னிய மென்றும்,
6. பிரமேய சைதன்னிய மென்றும்,
7. பல சைதன்னிய மென்றும்,

இப்படி வியவகாரத்தில் ஒரு சைதன்னியமே ஏழுவிதமாய்ச் சரீராந்தத்தில் கூடிநிற்பதாகச் சொல்லப்படும்.

இவ்வேழுவித தத்துவங்களோடுங்கூடிய தேகங்களை நிரூபிக்கின்றனம்.

## சைதன்னியத்தின் குணங்களின் வேற்றுமை.

1. மாயையோடு கூடாத சைதன்னியம் சுத்த சைதன்னிய மென்றும்,

2. அம் மாயையோடு கூடின சைதன்னியம் ஈஸ்வர சைதன்னிய மென்றும்,

3. அவஸ்தையோடு கூடின சைதன்னியம் சீவ சைதன்னிய மென்றும்,

4. அந்தக்கரணத்தோடு கூடின சைதன்னியம் பிரமாத்துரு சைதன்னிய மென்றும்,

5. அந்தக்கரண விருத்தியோடு கூடின சைதன்னியம் பிரமாண சைதன்னிய மென்றும,

6. இந்திரியங்களோடு கூடின சைதன்னியம் பிரமேய சைதன்னிய மென்றும்,

7. இந்திரிய விஷயங்களோடு கூடின சைதன்னியம் பல சைதன்னிய மென்றும் விளங்காநின்ற அகண்ட பரிபூரணமாய் அத்வைதமாய் விளங்கப்பட்ட பரமாத்ம சொரூபமே உபாதி பேதங்களால் ஏழுவிதமாய்ப்பெயர் சொல்லப்பட்டது.

அந்த உபாதிகளைத்தள்ளி அத்வைத ஆநந்தபரிபூரண சொரூபமான பரமாத்மாவே தானென்று யாரறிகிறார்களோ அவர்களே வித்வாம்சர்களென்றும், மெஞ்ஞானிகளென்றும, ஜீவன்முத்தர்களென்றும் வேதாந்தசாஸ்திர சித்தாந்தம்.

ஞானம் வந்தபின்பு பஞ்சகோசத்திற்கு புறம்பாகவே ஆத்மாவையறிந்தபடியால் ஞானம் வருவதற்குமுன்பும் பஞ்சகோசத்திற்கு புறம்பாகவேயிருந்தவராக ஆத்மா சித்திக்கையினாலும் அஞ்ஞான காலத்திலும் பஞ்சகோசங்கள் செய்த சஞ்சித கன்மத்தைக்குறித்து ஆத்மா கர்த்தாவாகாதபடியினாலும் சஞ்சித கன்மமில்லாததனால் தான் முத்தனென்றறிக.

ஞானம் வந்தபின்பும் கருமம் செய்கின்ற பஞ்சகோசங்கட்கு தான் அன்னியமாகவே இருக்கப்பட்டபடியினால் இன்று முதல் ஆகாமியமாகப் பஞ்சகோசங்கள் பண்ணப்படுகின்ற கன்மபந்தம் சாக்ஷியாயிருந்து அறிகின்ற தனக்கில்லாதபடியினால் தான் அகர்த்தாவென்றறிக.

வாத பித்த சிலேஷ்ம முதலான வியாதிகளும், இடி சூடு முறிதல் காய முதலான பீடைகளும், தூல சரீரத்திற்கு மாத்திரம் வந்ததேயல்லாமல், சூட்சும சரீரத்திற்கு இல்லாதபடியினாலும், காமக்குரோத

லோப மோக மத மாச்சரியம், ஊமை செவிடு இலச்சை பயம் அகங்காரம் இவ்வை முதலானவைகளும் சூட்சுமசரீரத்திற்கு வந்ததல்லாமல் காரண சரீரத்திற்கில்லாதபடியால், அதைக் காரிய சரீரத்திற்கு உண்டாக்கிவைக்கின்ற குளிர்காம்,காரண சரீரமாத்திரத்திற் குண்டானபடியினாலும்,இம் மூன்றுவகை சரங்களையும் பிரித்துநின்ற சிதாபாசனுக்கு உட்பட்டில்லாதபடியாலும், சாக்ஷிமாத்திரமாயிருக்கின்ற தனக்கு இந்தப்பிரசங்கமே வரக் கணக்கில்லை என்றபடியினால், நிரூபாதி காரண நாம நிரூபத்திரைவனென்றறிக.

நானென்றபிமானத்திற் கிடமாக ஆத்மாவாகத் தோற்றின, புத்திர மித்திர களத்திர பூதாதிகள் வெவ்வேறே பெயரையடைந்து தனக்குப் புறம்புபட்டு தோற்றுகையினாலும் விடுபடாமல் தானாக தோற்றின தூலசரீரமும் என் சரீரமென்று வேறேபெயரை யடைந்து தனக்கு புறம்புபட்டு தோற்றுகையாலும் புறம்புபடாமல் கண்டேன் கேட்டேனென்றுந் தானாகத் தோற்றின சூட்சும சரீரமும் என்கண், என் பிராணன், என்மனமென்று தனக்கு புறம்புபட்டுத் தோற்றுகையாலும் தானே தானாக விடுபடாமல் அறிந்தேன், அறியேன் என்கிற அவித்தையான விசிட்டனும் என் சீவன் என் அக்கியான மென்று தனக்குப் புறம்புபட்டு நாம ரூபந் தோற்றுகையினாலும், இவைகட்கெல்லாம் அப்பாற்பட்டு நிர்விகார சைதன்யமாயிருக்கின்ற பிரம்மமே தானாகின்றபடியினாலும், அந்தப் பிரம்மம் தனக்குப்புறம்புபட்டு நாம ரூபங் காணப்படாமல் தானாகவே சித்திக்கையாலும் அந்தச் சைதன்னியமாகின்ற தான் ஆத்மாவென்றறிக.

வாத பித்த சிலேஷ்ம தோஷ மயமாயிருக்கின்ற ஸ்தூல சரீரம், இராகத் வேஷ மோகமயமாயிருக்கின்ற சூட்சுமசரீரம், அஞ்ஞானம்; ஞானமயமாயிருக்கின்ற விசிஷ்டன் உற்பத்தி, திதி, லயமுதலான தோஷமயமாயிருக்கின்ற பஞ்சபூதம், இவைகளுக்கெல்லாம் அன்னியமானபடியினாலே தான் நிர்த்தோஷ னென்றறிக. இதுவே வேதாந்தத்தின் சித்தாந்தம்.

ஈன்றளித்தழிக்குஞ்செய்கைக் கேதுவா மயனும்மாலாய்
ஆன்றவீசனுமாய்த்தானே யனந்த மூர்த்தியுமாய்நிற்கும்
பூன்றமுத்தனுமாயின்பப் புணரியா தவனாய் நாளும்
தோன்றியவிமலபோத சொரூபத்தைப் பணிகின்றேனே. (கைவல்யம்)

பகர்ச்சி மடவார் பயில நோன்பாற்றல்
இகட்சி தருநெஞ்சத் திட்ப—நெகிழ்ச்சி
பெரும்பூரிக் கின்றமூலைப் பேதாய் பலகால்
எரும்பூரக் கற்குழி யுமே.

உடற்கு வருமிடர்நெஞ் சோங்கு பசித் துற்றோர்
அடுக்கு மொருகோடி யாக—நடுக்குறூஉர்
பண்ணிற் புகலும் பணிமொழியா யஞ்சுமோ
மண்ணிற் புலியை மதி மான்.

(சிவப்பிரகாசசுவாமிகள் நன்னெறிவிளக்கம்.)

எவ்வினையோனு மினை விழச்சொன் றில்லெனிற்
தெவ்வுந் திசைநோக்கிக் கைதொழுவும்—அவ்வினை
காத்த லிலரேல் யெனைத்துணைய ராயினுந்
தூர்த்தருந் தூர்ப்பாரலர். (குமரகுருசுவாமிகள் நீதிநெறிவிளக்கம்.)

கள்ளும்வளனும் விரும்பிறேல் மகங்கள்செய் காமத்தின்மனதானால், கொள்ளும் பெண்டொடு கலவிசெய் யெனிலிவன்கொறையெலாந் தொடாவெனன்றே, தள்ளும்வேதத்தின் சம்மதஞ் சகலமுந்தவர்வதே கருத்தாகும், விள்ளுமிவ்விதி யென்னெனிற் பூருவங்யமமாம் விதியன்றே. (கைவல்லிய நவநீதம்.)

காமத்தாலிராவணன் கருத்தழிந்தனன்
கோபத்தாற்கௌசிகன் தவத்தைக்கொட்டினன்
கோபத்தானகுடனுங் கோலமாற்றினன்
கோபத்தாலிறந்தவர் கோடிகோடியே.

இந்நூலில் உபாதி, வைராக்கியஞானவரம்புகளும், சரியையாதி யோகவிஷயங்களும், சேர்ந்த எழுநான்கு தத்துவவுடற்கூறும், முற்றுப் பெற்றன. சுபம், சுபம்.

இங்ஙனம்:

பெங்களூர் - நாகரத்தினம்.

நெ. 7, ஸ்ரீநிவாச ஐயர் தெரு, மதராஸ்.

இதற்கு உபசரணமாக ஸ்ரீசங்கராச்சாரிய சுவாமிகள் அருளிய மஹாவாக்கிய பிரகரணமும் வருகின்றன.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## ஸ்ரீ சங்கராசாரியசுவாமிகள் அருளிச்செய்த

# மகாவாக்கிய பிரகரணம்.

### விநாயகர் துதி.

குணமதி யோர்கள் குறித்தனை யருளுங்
கணபதி திருவடிக் கருத்தினி லிருத்துவாம்.

### ஸ்ரீ மகாவிஷ்ணு துதி.

நாடிய பொருள்கைக்கூடும் ஞானமும் புகழுமுண்டாம்
வீடியல் வழியதாக்கும் வேரியங் கமலைநோக்கும்
நீடிய வரக்கர்சேனை நீறுபட் டழிய வெற்றி
யாடிய சிலைமிராமற் றிருவடித் தொழுவோமியாமே.

### ஆஞ்ஜிநேயர் துதி.

மனோஜவம் மாருதத் துல்லிய வேகம்
ஜிதேந்திரியம் புத்திமதாம் வரிஷ்டம்
வாதாத்மஜம் வானர யூதமுக்கியம்
ஸ்ரீராமதூதம் ஸிரஸா நமாமி.

### நூலாசிரியர்

இச்சாஸ்திரம் வடமொழியினின்று தென்மொழிபாஷையில்
மொழிபெயர்த்துக் கூறியது.

உலகுநீள் வடிவை யொருபடத் தமைத்திங்
கூண்கணுக் கொருங்கு காட்டுதல் போல்
நிலமிசைச் சிறந்த கலைமுழு துணர்ந்த
நெடும் புகழ்ச் சங்கர முனிவன்
புலமிகு மரபில் வித்தியா ரண்யப்
போதக னெடுத் தினி துரைத்த
நலமிகு வேத மகாவாக்கிய போத
மாமணித் தமிழ் மொழிக் கணிவாம்.

வேத வேதாங்க விரிவெலாந் தொகுத்து
வியாதன் முன் புகன்ற சூத்திரங்கள்
போதமாம் பொருட்டுப் பாஷியம் விரித்துப்
புகன்றருள் செய்த வாதி சங்கரர்
பேதமில் சுவானு பூதியை விளக்கப்
பேசிய வசிட்டமா முனி யதன்
சாதனஞ் சோபான மநீஷா பஞ்சக வவ்
விளக்கநூல் தமிழ் மொழிக் கணிவாம்.

இத்தகு சிந்தா மணிகள் பெறறவருக்
கெய்தரிக்ரம திலே யிலைக் குறியோர்
உத்தமர் முன்னஞ் செய்த வப்பயனு
லொண் பொருட் பாக்கிய மடைவர்
சித்த சுத்தியினுற் சத்திய சங்கற்பச்
செல்வரா மிவர் தமைச் சார்ந்து
பத்திசெய் பலருஞ் சதானந்தச் செல்வம்
படைத்தினி தளிப்பர் மற் றயர்க்கும்.

## குருவணக்கம்.

சற்குருவே நமஃ.

### சுலோகம்.

பிரம்மானந்தம் பரம சுகதம் கேவலம் ஞானமூர்த்திம்
விஸ்வாதீதம் ககன சதுர்சியம், தத்வ மசியாதி லட்சியம்.
ஏகம் நித்யம் விமலமசலம் சர்வதா சாக்ஷி பூதம்
பாவாதீதம் திரிகுணரகிதம் ஸ்ரீசற்குருந் தநமாமி.

தியானமூலம் குரோர்மூர்த்திம், பூசாமூலம் குரோர்ப்பதம்
மந்த்ரமூலம் குரோர்வாக்கியம் முத்திமூலம் குரோர்க்கிருபா.

குருப்ரஹ்மம் குரோர்விஷ்ணு, குருத்தேவோ மகேஸ் வரஃ
குருசாட்சாத் பரப்ரஹ்ம, தஸ்மை ஸ்ரீ குருவே நமஃ

மன்னதோ ஸ்ரீஜகன்னதோ, மகதகுரும் ஸ்ரீஜகத்குரும்
மமாத்மா சர்வபூதாத்மா, தஸ்மைஸ்ரீ குருவே நமஃ

சைதன்யம் சாஸ்விதம்சாந்தம், வியோமாதீதம் நிரஞ்ஜனம்
நாதபிந்து களாதீதம், தஸ்மைஸ்ரீ குருவே நமஃ

*பிரஹ்மவிஷ்ணுஸ்ய ருத்ரஸ்ய, ஈஸ்வரஸ்ய சதாசிவ*
*ஏகேகர்ப்பக தத்கேய, தஸ்மைஸ்ரீ குருவே நம:*

*சர்வாத் மகம் சர்வ வசனம், சச்சிதானந்த விக்ரஹம்*
*சர்வாதாரம் சர்வபூரணம், சதாநாராயணம் பஜே.*

ஸ்ரீபாரதி தீரத்து வித்தியாரண்ணிய முநீஸ்வரர்களை நமஸ்கரித்து ஸ்ரீசங்கராசாரிய சுவாமிகள் திருவாய்மலர்ந்த மகாவாக்யபிரகரணத்தைப் பெற்றவரையில் புத்திக்குத்தோன்றியமாத்திரம் நிரூபிக்கின்றனம்.

*இந்த லோகத்திலே பரமஹம்சபரிவிராஜகாசாரியரான ஸ்ரீசங்கராசாரிய சுவாமிகள் மந்தாதிகாரிகளாயும், முமுக்ஷுக்களாயும், அற்ப புத்தியுள்ளவர்களாயுமுள்ள ஜனங்களைக்குறித்து காருண்யராய், அவர்களெல்லாம் மோக்ஷ மடையவேண்டு மென்கிற கிருபையினுல், நாமடைந்த மகாவாக்கியார்த்தப் பிரகரணத்தை அனுக்கிரகம் செய்திருக்கின்றனர்.*

*இதனுல், இகபரங்களிலே யாவரொருவர் முன்செய்த தவத்தினுல் ஞானத்தில் விருப்புற்றுச் சற்குருநாதனை சேவைகிடைத்து மோக்ஷம்பெறப் பரிபக்குவம் வந்தவிடத்து இந்த மேன்மையுள்ள வேதாந்த தரிசனவிளக்கமே சூரியப்பிரகாச விளக்க மாயிருக்கும். மற்ற நூற்க ளியாவும் மின்மினி விளக்கம்போலாகும். ஆகையால், வேதாந்த விசார தரிசனமே உண்மை யென்றறியவும். அதுவரில் பூத ஜன்மங்கள் கோடிபுனிதனும். ஆகையால், எல்லாப்புராணங்களிலும் சாஸ்திரங்களிலும் மேலாகியது நான்குவேதம். இந்த நான்கு வேதமாகிய இருக்கு எஜுர் சாமம் அதர்வணம் என்னும் வேதங்கள் முழுவதும் கர்ம காண்டமென்றும், உபாசனு காண்டமென்றும், ஞான காண்டமென்றும் திரிவிதமாக விதித்திருக்கின்றது.*

*அந்தக் காண்டத் திரயங்கள் எதைப்பற்றி பிரதிபாதிக்குமென்றால்:—*

1. *கர்ம காண்டம் கர்மங்களையே பிரதிபாதிக்கும்.*

2. *உபாசனு காண்டம் இந்திராதி திக்குப்பாலக தேவதிகளையே பிரம்மமென்று உபாசிக்கச் சொல்லும்.*

3. *ஞான காண்டம் ஆன்மாவைப் பிரத்தியக்ஷமாகத்தானே பிரம்மமென்றறியச் சொல்லும். இப்படிச் சொல்லும் நான்குவேதங்களும் நான்கு வாக்கியமாகவே முடிவுகாட்டிச்சொல்லும்.*

அஃதெப்படியெனில்:—

விதிவாக்கியமென்றும் நிஷேதவாக்கியமென்றும்
அவாந்திரவாக்கியமென்றும் ஆப்த்தவாக்கியமென்றும்

என, நான்குவித வாக்கியங்களாக குறிப்பித்திருக்கின்றது.

அவைகளில் :—

முதல், விதிவாக்கியமாவது:—பிராமணனைக்குறித்து மரணபரியந்தம் நித்தியம் இரண்டுமூன்றுகால சந்தியாவந்தனஞ் செய்யவேண்டுமென்று அக்கினி ஹோத்திரம் பண்ணவேண்டுமென்றும் விதித்திருக்கும்.

இரண்டாவது, நிஷேத வாக்கியமாவது:—களஞ்ச பக்ஷணாதிகளாயுள்ள நிஷித்த கர்மங்களைச் செய்யக்கூடாதென்று விலக்கும். இந்த நிஷேதங்களாயிருக்கிற இரண்டுவாக்கியங்களையும் கர்மகாண்டத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

மூன்றாவது, அவாந்திர வாக்கியமாவது:— ஜோதிஷ ஹோமாதி யாகங்களைச்செய்து ஜீவர்களுக்கு சொர்க்காதி போகமுண்டென்றும் இந்திராதிகளைப் பிரம்மமென்றும் உபாசிக்கச்சொல்லும். இந்த வாக்கியம் உபாசனாகாண்டத்தில், சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த வாக்கியங்களெல்லாம், கர்த்த தந்திரங்களானதால் வஸ்துதந்திரமான பதார்த்தசோதனைப் பண்ணப்படாது.

நான்காவது, ஆப்தவாக்கியமாவது:—முன் சொன்ன வாக்கியங்களைப்போல் பரோக்ஷமாயிருக்கின்ற தேவதைகளைப் பாவனையினால் உபாசிக்கச்சொல்லாமல் பிரத்தியக்ஷமாயிருக்கின்ற பிரத்தியேகாத்மாவை பிரம்மமென்று குருமுகமாயறிந்து உபாசிக்கின்றமையால் இது மகாவாக்கியம் என்று சொல்லப்படும். இதற்கு மகாவாக்கியமென்று பேர்வருவானேனென்றால், வர்ணசமுகம், பதம்பதசமுகம்,என வாக்கியங்களுண்டு. அஃதெப்படியெனில்:—அன்பக்கோ ரக்ஷாங்களென்றும், வர்ணங்களென்றும் பெயர் சொல்லப்பட்டிருக்கின்றது. இதில் இரண்டு வர்ணம் மூன்றுவர்ணங் கூடினது ஒரு பதம். இப்படி இரண்டுபதம் மூன்றுபதம் கூடினது ஒருவாக்கியம். இப்படி வர்ணமும் பதமும் எல்லா வாக்கியங்களுமிருக்க, இதற்கு மாத்திரம் மகாவாக்கியமென்று பெயர் வருவானே னென்றால், மற்ற மூன்று வாக்கியங்களுக்கும் நித்தியபலமான சொர்க்காதிலோக போகப் பிராப்தியும், புனர்ஜன்மமே யல்லாமல் நித்தியானந்த சாக்ஷாத்காரக்கியான மில்லாமையாலும ஆப்தவாக்கியத்தில் நித்தியபலமும் சகலதுக்க வபாவமும், நிரதிசயானந்தபோகமும், புனராவிருத்தியில்லாமையு முண்டாவதாலும்,

அன்றியும் வேதங்களெல்லாம் வேத புருடனை, இந்திராதிகள் முதலான அஷ்டதிக்கு தேவதைகளை உபாசிக்குமிடத்தில் காண்டத்திரயமாகவேயிருக்கும். அது எங்ஙனமெனில்,

கர்மகாண்டமானது:— வேத புருடனுடைய பாதத்திலிருந்து மூலாதாரபரியந்தம் பிரிதிபாதிக்கும்.

உபாசனகாண்டமானது:—வேத புருடனுடைய மூலாதாரத்திலிருந்து இருதயம்வரையில் சொர்க்காதிபரியந்தம் பிரதிபாதிக்கும்.

ஞானகாண்டமானது:— வேத புருடனுடைய இருதயத்திற்கு மேல் பிரம்ம ரந்திரம் வரையில், பிரம்ம லோக பரியந்தம் பிரதிபாதிக்கும்.

இதில் கர்மகாண்டத்திலும் உபாசனகாண்டம், சிரேஷ்டம். உபாசனகாண்டத்திலும், ஞானகாண்டம், சிரேஷ்டம். இப்படி வேதங்களெல்லாஞ் சொல்வது வேதாந்தமானலும் காண்டத்திரியங்களுக்கு பிரயோசனமுண்டு. அதெப்படியெனில்:—

கர்மகாண்டம் சித்தசுத்தி, உபாசனகாண்டம் ஏகாக்கிரசித்தம், ஞானகாண்டம் அனர்த்தம் நிவர்த்தி ஆனந்தப்பிராப்தி. இப்படிக் காண்டத்திரயத்திலும் ஞானகாண்டத்தில் சொல்லியிருக்கிற வாக்கியங்களுக்கு,மகாவாக்கியமென்று பெயர்வந்திருக்கின்றது. அதெப்படியெனில்,

நான்கு வேதத்திலும் ஞானகாண்டத்தில் அநேக மகாவாக்கியங்களுண்டு; அதற்குள் உத்தம வாக்கியங்களாயுஞ் ஜீவபரம் அயிக்கியத்தைப் பிரதிபாதிக்கிறதாயும் நான்கு வேதங்களிலேயும், நான்கு உபநிஷத்துகளிலேயுமிருந்து, நான்கு மகாவாக்கியங்களுண்டாயிருக்கின்றன, அது எந்தெந்த வேதங்களில் எந்தெந்த உபநிஷத்துகளிலிருந்து எந்தெந்த மகாவாக்கியம் உண்டாயிற்றென்றால்:—

1. இருக்குவேதத்தில், தைத்திரிய உபநிஷத்திலிருந்து, (ப்ரக்ஞ்ஞானம் ப்ரஹ்மம்) என்கிற வாக்கியமுண்டாயிருக்கிறது.

2. எஜுர்வேதத்தில், பிரஹதாரண்ணிய உபநிஷத்திலிருந்து, (அகம்ப்ரஹ்மாஸ்மி) என்கிற வாக்கிய முண்டாயிருக்கிறது.

3. சாமவேதத்தில், சாந்தோக்கிய உபநிஷத்திலிருந்து தத்வமசி என்கிற வாக்கிய முண்டாயிருக்கிறது.

4. அதர்வணவேதத்தில் முண்டகோப உபநிஷத்திலிருந்து (அயமாத்மாப்ரஹ்மம்) என்கிறவாக்கியமுண்டாயிருக்கிறது.

இப்படி நான்கு வேதத்திலுள்ள ஞான காண்டங்களில் நான்கு உபநிஷத்திலிருந்து நான்குமகாவாக்கியமுண்டாயிருக்கிறது. அவைகளில் இந்நான்கு மகாவாக்கியங்களுக்குள் ஜீவப்பிரஹ்ம ஐக்கியத்தை பிரதிபாதிக்கிறதற்கு, ஒரு வாக்கியம் போதாதா? நான்கு வாக்கியம் வேண்டுமோவென்றால், அவசியம்வேண்டும். அதெப்படியெனில்,இந்த நான்கு வாக்கியங்களுக்கும் பிரயோசன முண்டாயிருக்கிறது. அதாவது (தத்வமசி;) என்கிறவாக்கியம் அது நீயானால் என்கிற வாக்கியம், அது குருவின் உபதேசவாக்கியம். (அகம்ப்ரஹ்மாஸ்மி) என்கிற வாக்கியம் சீடன் ஆத்மானு சந்தானஞ்செய்கிறவாக்கியம். (ப்ரக்ஜ்ஞானம் ப்ரஹ்மம்,) என்கிற வாக்கியம் சொரூபலக்ஷணத்தைச் சொல்லுகிற வாக்கியம். (அயமாத்மாப்ரஹ்மம்) என்கிற வாக்கியம் அது சீடன் தன் யுத்தியினால் தன்னைப் பிரத்தியக்ஷம், பிரஹ்மமாக அறிகிற சாக்ஷாத்காரவாக்கியம்.

இப்படி நான்கு வாக்கியங்களுக்கும் வெவ்வேறே பிரயோசனமிருக்கிறபடியால், இந்த நான்கு வாக்கியங்களுக்கும் முமுக்ஷுக்களாயுள்ள அதிகாரிகளுக்கு அவசியம் வேண்டும். ஆனால், இந்த நான்கு வாக்கியங்களை யறிந்தால் போதுமோவென்றால், போதாது. பின்னை எப்படியெனில், வாக்கியார்த்தக்கியானத்தை அறியவேண்டும். அதெப்படி யறிகிறதென்றால், பதபதார்த்தக் கியானத்தினாலே அறியவேண்டும். அந்தப் பதபதார்த்தமாவதெது? பதார்த்தகியானமாவதெது? வாக்கியமாவதெது? வாக்கியார்த்தமாவதெது? வாக்கியார்த்தகியானமாவதெதுவென்றால்:—

இந்த நான்கு வாக்கியங்களுக்கும் பதினொருபதம்; இப்பதினொரு பதத்திற்கும் எட்டுசலோகம், எந்தெந்த வாக்கியங்கள் எத்தனை எத்தனை பதமென்றால், முந்தினவாக்கியமாவது.—

(ப்ரக்ஜ்ஞானம் ப்ரஹ்மம்) என்றிரண்டு பதம். இரண்டாம் வாக்கியம் (அகம் ப்ரஹ்மாஸ்மி) என்று மூன்று பதம். மூன்றும் வாக்கியம் (தத்வமஸி) என்று மூன்று பதம். நான்காம் வாக்கியம் (அயமாத்மாப்ரஹ்மம்) என்று மூன்றுபதம். இப்படிப் பதினொரு பதத்திற்குள்ளே ஜீவப்பிரிதிவாக்கியம் எத்தனை? ஈஸ்வரப் பிரிதிவாக்கியம் எத்தனை? ஐக்கியமானவாக்கியம் எத்தனையென்றால், முந்தியவாக்கியத்தில் முதல் (பிரக்ஞானம்) என்கிற பதமும் இரண்டாவது வாக்கியத்தில் (அகம்) என்கிறபதமும், மூன்றும்வாக்கியத்தில் (த்வம்) என்கிற பதமும், நான்காம்வாக்கியத்தில் (அயம்) என்கிறபதமும், ஐந்தாவது (ஆத்மா) வென்

கிறபதமுமாக, ஐந்துபதமும் ஜீவனைப்பிரதிபாதிக்கின்றது. (தத்) என்கிறபதமும் மற்ற மூன்று வாக்கியத்திலுள்ள ப்ரஹ்மபத மூன்றும் ஆகநான்கு பதமும் பூரண ப்ரஹ்ம்மத்தை பிரதிபாதிக்கின்றது.

(அசி) என்கிறபதமும் (அஸ்மி) என்கிற பதமும் இவ்விரண்டும் ப்ரஹ்மங்களுக்கு ஐக்கியத்தைச் சொல்லுகின்றது.

தத்வமசியாதி பதங்களுக்கு ஜீவாத்மா பரமாத்மாக்கள் பதார்த்தங்கள் இந்த ஜீவ பரமாத்மாக்களை ஒன்ருக அறிகிறதே பதார்த்த கியானம். இது வாக்கியார்த்தக் கியானமென்று சொல்லப்படும். இனி பதங்களுக்கு அர்த்தமெப்படி யெனில், வாச்சியார்த்தம் என்றும் லக்ஷியார்த்தம் என்றும் இரண்டு விதமாகவிருக்கும். ஆனலதில் பிரக்ஜ்ஞான பதத்திற்கு வாச்சியார்த்த மெப்படியெனில், பிரத்தியேகாத்மாவினுடைய சாயை, அந்தக்கரணத்தில் பிரதிபிம்பித்து தன்னுடைய பிரகாசத்தை அகங்காரத்திற்குக் கொடுத்து, அகங்காரத்தினுடைய தர்மத்லதை மேற்போட்டுக்கொண்டு சித்துஞ் ஜடமுமாய் அன்னியோன்ய அத்தியாசத்தை யடைந்து, தப்தாய பிண்டம்போல் சிதாபாச ஜீவனுனவன் கர்த்தா, போக்தா, சுகி, துக்கி யென்றும் அபிமானிக்கின்ருன். இந்தசிற்சாயைக்கும், அகங்காரத்திற்கும், சகஜதாதாத்மியமென்றும் சிற்சட கிரந்தியென்றும் சொல்லப்படும். இந்தச் சிற்சாயை அகங்காரனுனவன், தூல சரீரத்தை *அத்யாசம் பண்ணிக்கொண்டு தூலசரீரத்தினுடன் ஷட்பாவ விகாரங்களை யெல்லாம் தான் மேற்போட்டுக்கொண்டு, பிறந்தேன் வளர்ந்தேன் இருந்தேன் இளைத்தேன் பருத்தேன் இறந்தேன் கருப்பன் சிவப்பன் குட்டையன் நெட்டையனென்று தூலசரீரத்தை யபிமானிக்கின்ற சிற்சாயை அகங்காரத்திற்கும் தூலசரீரத்திற்கும் கர்ம ஜசுதாத்மியமென்று சொல்லப்படும். இதில் அந்தக்கரணசாக்ஷியாக யிருக்கின்ற சைதன்னியத்தினிடத்தில் அகங்கார அதர்மத்தை ஆரோபிக்கிறபோது சாக்ஷிக்கும் அகங்காரத்திற்கும் பிராந்தியை ஜகதாத்மியம், என்று சொல்லப்படும் படித் திரிவித ஜகதாத்மியங்களோடு கூடியிருக்கிற சிதாபாசனுகிய ஜீவனே, ஞாதுரு ஞான ஞேய மாகிற திரிபுடியோடுங்கூடிச் சரீரத்திரய வியாபாரத்தைச் செய்வன். இதில் ஞாதுருவாவது, அந்தக்கரணத்திற் பிரதிபிம்பித்த சிதாபாசஜீவனுனவன் முன்னே விருத்தியோடே கூடியிருக்கிறபோது ஞானமென்று சொல்லப்படும். அவன்றனே விடயத்துடனே கூடியிருக்கிறபோது ஞேயமென்றுஞ் சொல்லப்படும். இந்தத் திரிபுடிசம்மந்தமான சிதாபாசனுன ஜீவனே தசேந்திரிய வியாபாரத்தைப் பண்ணுவன். அதெப்படியெனில், யாதொரு சைதன்ய

மானது அந்தக்கரண விருத்தியோடு கூடிக்கொண்டு சுரோத்திரேந்திரிய துவாரா சப்தங்களை யறிவிக்கின்றது.

2. அந்தச் சைதன்னியமே அந்தக்கரண விருத்தியோடு கூடிக்கொண்டு தொக்கேந்திரிய துவாராக ஸ்பரிசங்களை அறிவிக்கிறன்து.

3. அந்தச் சைதன்னியமே அந்தக்கரண விருத்தியோடு கூடிக்கொண்டு நேத்திரேந்திரியத் துவாரா ரூபங்களை அறிவிக்கின்றது.

4. அந்தச் சைதன்னியமே அந்தக்கரண விருத்தியோடு கூடிக்கொண்டு ஜிஹ்வை இந்திரியத் துவாரா இரசங்களை அறிவிக்கின்றது.

5. அந்தச் சைதன்னியமே, அந்தக்கரண விருத்தியோடு கூடிக்கொண்டு ஆக்கிராணேந்திரியத் துவாரா கந்தங்களை அறிவிக்கின்றது.

6 அந்தச் சைதன்னியந்தானே அந்தக்கரண விருத்தியோடு கூடிக்கொண்டு வாக்கேந்திரியத் துவாரா வசனிக்கச் செய்கின்றது.

7. அந்தச் சைதன்னியமே அந்தக்கரண விருத்தியோடு கூடிக்கொண்டு பாதேந்திரியத்தால் கமனஞ் செய்விக்கின்றது.

8. அந்தச் சைதன்னியமே அந்தக்கரண விருத்தியோடு கூடிக்கொண்டு பாணிந்திரியத்தால் கொடுக்கல் வாங்கல் செய்விக்கின்றது.

9. அந்தச் சைதன்னியமே அந்தக்கரண விருத்தியோடு கூடிக்கொண்டு குய்யேந்திரியத் துவாரா ஆனந்தத்தை யறிவிக்கின்றது.

10. அந்தச் சைதன்னியமே அந்தக்கரண விருத்தியோடு கூடிக்கொண்டு குதேந்திரியத் துவாரா மலவிஜர்ச்சனஞ் செய்விக்கின்றது.

1. இப்படித் தசேந்திரிய வியாபாரத்தைச் செய்கின்ற ஜீவனே பிரக்ஞான பதத்திற்கு வாச்சியார்த்தம் என்று சொல்லப்படும்.

(I) 1. (ப) இனி பிரக்ஞானம் என்கின்ற பதத்திற்கு லக்ஷியார்த்தமேதென்றால் தாதாத்மியத் திரய மில்லாததாயும் திரிபுடி ரகிதமாயும், பஞ்சகோச விலக்ஷணராயும், அவஸ்தாத் திரய சாக்ஷியாயும் கூடஸ்தராய் நிர்விகாரியாயிருக்கிற பிரத்தியக்ஷ சைதன்னியமே பிரக்ஞான பதத்திற்கு லக்ஷியார்த்தமென்று சொல்லப்படும்.

1. இனி (ப்ரஹ்மம்) என்கிற பதத்திற்கு வாச்சியார்த்த மேதெனில் உத்தமமாயிருக்கின்ற, பிரம்மாதி சரீரங்களிலும், மத்தியமாயிருக்கின்ற, மனுஷியாதி சரீரங்களிலும், அதமமாக யிருக்கின்ற பசுவாதி சரீரங்களிலும், ஆகாசாதி பஞ்சமகாபூதங்களிலும், யாதொரு

சைதன்யமானது ஏகமாயிருக்கின்றதோ, அந்தச்சைதன்னியமே, பிரம்ம பதத்திற்கு வாச்சியார்த்தம்.

1. (a) இனிப் பிரம்ம பதத்திற்கு லக்ஷியார்த்தமாவதேதெனில், சர்வோபாதி ரகிதராய் பிரபஞ்ச விலக்ஷணராய் சச்சிதானந்த சொரூபராய் பிரபஞ்ச வதிஷ்டானராய் மாயாகாரி யாதீதரா யிருக்கின்ற பரமாத்மா சைதன்யமே பிரம்மபதத்திற்கு லக்ஷியார்த்தம்.

1. (b) இப்படிப்பிரம்மாதி பிபீலிகானந்தமான சமஸ்த சரீரங்களிலேயு மிருக்கின்ற பரமாத்ம சைதன்யமே பிரத்தியேகாத்மாவாகிய கூடஸ்தரான அவரே என்னிடத்திலுமிருக்கின்றது. அந்த என்னிடத்திலிருக்கிற அறிவே எல்லாரிடத்திலும் இருக்கின்ற அந்த அறிவே ஏகமாயிருக்கின்ற பிரம்மமென்று ஞானத்தாலறிகிறதே, (பிரக்ஞானம் பிரம்மம்)என்கிற வாச்சியார்த்தக்கியானமென்று சொல்லப்படும்.

(II) 1. இரண்டாம் வாக்கியத்தில்(அகம்)என்கின்றபதத்திற்குவாச்சியார்த்தம் எப்படியெனில், பரிபூரணராய் காலாதீதராய் இந்திராதிகளைக் காட்டிலும் உத்கிருஷ்டமான யாதோர் ஆத்மாவான சைதன்யமே, அவித்தையை அதிஷ்டானமாக உடைத்தாயிருக்கிறதேகத்தில்புத்திக்கு சாக்ஷியாய் இருதயகமலத்தில் இருந்துக்கொண்டு (அஹம்)நானென்று எப்போதும் உச்சரித்துக்கொண்டிருக்கிற அந்த பரமாத்மாவே அஹம் என்கிற பதத்திற்கு வாச்சியார்த்தமென்று சொல்லப்படும்.

1. a. இனி (அஹம்) என்கிறபதத்திற்கு லக்ஷியார்த்தமெப்படியெனில், சர்வோபாதி சூன்யராய், தேகேந்திரியாதி விலக்ஷணராய் அபரிச்சின்னராய் இருக்கிற ஆத்மாவே அஹம் என்கிற பதத்திற்கு லக்ஷியார்த்தமென்று சொல்லப்படும்.

1. இனி (பிரம்மத்திற்கு) வாச்சியார்த்தம் எப்படியெனில் சுதாவாய் எப்போதும் எங்கும் நிறைந்தவராய் தேகாதி பிரபஞ்சத்தைக் காட்டிலும் உத்கிருஷ்டராய் சமஸ்த பிராணிகளுடைய சொரூபமாயிருக்கிற பரமாத்மாவே பிரம்ம சப்தத்தினாலே வர்ணிக்கப்பட்டவரிவரே பிரம்ம, பதத்திற்கு வாச்சியார்த்தம்.

1. a. இனி (பிரம்ம) பதத்திற்கு லக்ஷியார்த்த மெப்படியெனில் பிரபஞ்ச விலக்ஷணராய் நித்தியானந்த சொரூபராய் நிர்மலானந்தமாயிருக்கின்ற பரமாத்மாவே (பிரம்ம) பதத்திற்கு லக்ஷியார்த்தமென்று சொல்லப்படும்.

1. b. (அஸ்மி) என்கிற பதத்திற்கு அர்த்தம் எப்படி யெனில், நானே பிரம்மமாக யிருக்கிறேனென்றும், பிரம்மமே நான், நானே பிரம்ம,

மென்றும் அகண்டாகாரமாக அறிகிறதே (அகம் பிரம்மாஸ்மி) என்கின்ற மூன்றுபத வாக்கியார்த்தக் கியானமென்று சொல்லப்படும்.

(III) இனிமூன்றும்வாக்கியத்தில்(தத்வமஸி)(தத்)என்கிறபதத்திற்கு அர்த்தமெப்படியெனில்(ஏகமேவாஅத்வீதியம்பிரம்மம்)யென்று மூன்று பதம், அதில் ஏகமென்றால் போதாதா, யேவாயென்று சொல்வானேனென்றால் அதற்கு ஏகமென்கிற பதத்தினால் சுஜாதிசூன்யம், ஏவாயென்கின்ற பதத்தினால் விஜாதிசூன்யமென்றும், அத்துவீதிய மென்கிற பதத்தினால் ஸ்வகதபேத சூன்யமென்றும் சொல்லப்படுகின்றது.

சுஜாதி விஜாதி ஸ்வகதபேத மாவதேதெனில் ஒருபிராமணனுக்கு இரண்டாம் பிராமணனிருந்தாலும் ஒரு விருக்ஷத்திற்கு இரண்டாம் விருக்ஷமிருந்தாலும் சுஜாதி யென்று சொல்லப்படும்.

பிராமணனைத்தவிர சூத்திரன் ஒருத்தன் உண்டென்றும், விருக்ஷத்தைத்தவிர, கல்லொன்றுண்டென்றும் சொல்வது விஜாதி யென்று சொல்லப்படும். பிராமணன் ஒருத்தனானாலும், கரசரணாதி அவயவங்களென்கிற பேதம் எப்படியிருக்கின்றதோ, அதுபோல் விருக்ஷமொன்றானாலும் பத்திர புஷ்பங் கனி பலவகையென்கிற பேத மெப்படியிருக்கின்றதோ அப்படி ஸ்வகதபேதமென்று சொல்லப்படும்.

ஆகையாலிதைத் திரிவித பேதமுள்ள வஸ்துவென்று சொல்லக்கூடாது; அதெப்படியெனில்:—

ஆத்மாவிடத்திலும் இந்தத் திரிவித பேதமுங்கண்டோம். அதெங்ஙனமெனில், ஒரு வஸ்துவிலிருந்து ஜீவனென்றும். ஈஸ்வரனென்றும் பேதமிருக்கிறபடியால், சுஜாதி பேதமுங் கண்டோம். பிரம்மத்தைத் தவிர அனுர்த ஜடத்துவமான பிரபஞ்சம் அன்னியமா யிருக்கிறபடியால், விஜாதிபேதமுங் கண்டோம். இன்னும், ஆத்மாவுக்கு சத்து, சித்து, ஆனந்தமென்றும், மூக்குணங்களாகயிருக்கிறபடியால் ஸ்வகதபேதமுங்கண்டோமென்று சங்கித்தசிஷ்யனுக்கு, குருவானவர்சொல்லுகிறார்; திருஷ்டாந்தத்தில் பிராமணன் ஏகமென்னு மிடத்திலும், விருக்ஷம்,ஏகமென்னு மிடத்திலும், இரண்டாம் பிராமணன், இரண்டாம் விருக்ஷம்இல்லையென்றும்,சுஜாதிபேதமில்லையென்றும் கண்டதுபோல் திருஷ்டாந்தத்தில்(ஏகம்)மென்கிறபதத்தினால், (பிரம்மம்) ஒன்றென்னுமிடத்தில் ஒரு பிரம்மந் தவிர இரண்டாம் பிரம்மம் இல்லை யென்றருத்தங் கண்டோம். அதெப்படியெனில் ஒருவஸ்துதானே அபின்னமாய், பால்தயிர்நெய்போல்,உபாதான நிமித்தகாரணமாக விருந்துக்கொண்டு தான் தானே சிருஷ்டித்து, தான்தானே பிரவேசிக்கிறாரென்று, சுருதி

சொல்லுகிறபடியாலும் யுத்திக்கு அவ்வுண்மை புலப்படுகிறபடியினு லும், ஒரு ஆத்மாவைத்தவிர இரண்டாவது வஸ்து இல்லாதபடியினு லும், (ஜீவி) ஸ்வகதபேத மில்லையென்று ஏகமென்கிறபதத்தினுல் விசா ரிக்கையில் சுஜாதிபேதநம் தள்ளப்பட்டது. ஆனல், விஜாதிபேத முண்டோவென்று சங்கைவரும். அதற்குதாரண மெப்படியெனில் திருஷ்டாந்தத்தில் பிராமணனைத்தவிர சூத்திரன் ஒருவன் உண்டென் றும் விருக்ஷத்தைத்தவிர கல்லொன்றுண்டென்றும் விஜாதிபேதங்கண் டதுபோல், திருஷ்டாந்தத்தில் (ஏகமேவா) என்கிறபதத்தினுல் (பிரம்மம்) ஒன்று தானேயல்லாமல், இரண்டல்லாததாலும் பிரம்மத்தைத்தவிர வேருக அனுர்த ஜட துக்கமான பிரபஞ்சத்திற்கு சிதாகாசம், இல் லாதபடியினுலும் அந்த ஜடப்பிரபஞ்சம், வந்தியாபுத்திரன், ககனா விந்தம், சசவிஷாணம்போல், காலத்திரயங்களிலும் இல்லாதபடியாலும், (ஏகமேவா) என்கிறபதத்தினுல் விசாரிக்கையில், (பிரம்மம்) ஒன்று தானே யென்று விஜாதிபேதமுந் தள்ளப்பட்டது.

•• இனி திருஷ்டாந்தத்தில் பிராமணன் ஒருத்தனுலும், விருக்ஷம் ஒன்றுனுலும் கரசரணுதி அவயவபேதமும், பத்திர புட்பங் கனி பல பேதமும் ஸ்வகதபேதத்தில் கண்டதுபோல் திருஷ்டாந்திரத்தில், அத் வீதிய மென்கிற பதத்திற்கு அருத்தம் விசாரணையில், அவயவபேத மில்லாமல், நிரவயமானபடியினுலும் ஆத்மாவுக்கு சத்து, சித்து ஆன ந்தமெல்லாம் சொரூபமா யிருக்கிறபடியாலும், ஸ்வகதபேதமுந் தள் ளப்பட்டது.

1. இப்படி (ஏகமேவா அத்வீதியம்) யென்கிற பதத்திரயத்தினுல், சுஜாதிமுதலிய பேதத்ரயமில்லாததாய் பிரபஞ்ச சிருஷ்டிக்கு முன்னும் பின்னும் நாம ரூப மில்லாததாய் காலத்திரயத்திலும் நாசமில்லாத காலாதீத சைதன்யமான பிரம்மமே (தத்) அது என்கிற பதத்திற்கு, அருத்தஞ் சொல்லப்பட்டது.

2. (த்வம்) என்கிற பதத்திற்கு அருத்தமெப்படியெனில் தேகேந் திரிய விலக்ஷணராய், சிரவணமனன நிதித்தியாசங்களுடன் கூடியும் பிரத்தியக்கு சைதன்யமான ஜீவாத்மாவே (த்வம்) என்கிற பதத்திற்கு அருத்தம் நீ யென்று சொல்லப்படும்.

3. இனி (அசி) என்கிற பதத்திற்கு அருத்தமெப்படியெனில், சச்சி தாநந்த சொரூபரானபிரம்மமே (நீ) நீயே பிரம்மமா யிருக்கிறுயென்று சரீரத் திரயவிலக்ஷணரான பிரத்தியேகாத்மாவுக்கும் மாயோபாதி ரகி தனுன பரமாத்மாவுக்கும் ஏகத்வம் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனல், தேகேந்திரியக் கிரகனுகிற் கிஞ்சிக்யனுயிருக்கிற ஜீவனுக்கும், போதாக்

கிரகனாக உள்ள சர்வஞ்ஞனபரனுயிருக்கிற அப் பரனுக்கு எப்படி ஐக்கியங் கூடுமென்றாலோ, அதற்கு லக்ஷணவாக்கியத்தினால் சொல்லக்கூடும். அதெப்படியெனில்:—

ஜகத் (விட்ட) லக்ஷணை, அஜகத் (விடாத)லக்ஷணை ஜகத்தஜகத் (விட்டுவிடாத)லக்ஷணையெனத் திரிவிதம். இதில் ஜகத் லக்ஷணைக்கு உதாரணவாக்கியம் சம்சர்க்கம், என்கிறவாக்கியம். அவை எவையெனில், (மஞ்சக்குரோசந்தி) (கங்காயாங் கோஷப்பிரதிவசதி) என்பனவாம் மஞ்சம் கூப்பிட்டதென்றும், கங்கைக்கண் இடைச்சேரி யுள்ளதென்றும் சொல்லுமிடத்தில், மஞ்சமான மரமானது கூப்பிடுமா? மஞ்சத்திலொரு புருஷனிருந்து கூப்பிட்டானென்று கொள்ளவேண்டியது. கங்கையானது, ஜலம், ஜலத்திலே இடைச்சேரி இருக்கமாட்டாது. கங்கைக்கரையில் இடைச்சேரி இருக்கிறதென்று கொள்ளவேண்டியது அப்படிபோல்:—

தொம்பதம் முக்கிய ஜீவ உபாதிதேகம். இந்திரியம், மனம், புத்தி, சித்தம், அகங்காரம், பிராணன் ஆக எழு உபாதிகளுக்கும் ஜீவசாக்ஷியாயிருக்கிறானென்று கண்டுகொள்க. இதுவிட்டலக்ஷணை.

இனி அஜகத் லக்ஷணைக்கு உதாகரணவாக்கியமானது வசிஷ்டவாக்கியம். அவை எவையெனில், சோணஸ் திட்டவதி, —சுவேதோட்டாவதி, என்பன, அவையாவது, ஒருவனைக்கண்டு ஒரு சிவப்பு குதிரையும் வெள்ளைப் பசுவையுங் கண்டாயா வென்பதற்கு, சிவப்பு நிற்கின்றது, வெள்ளை போகின்றது, யென்னுமிடத்தில் (சிவப்பானவருணம்) தனியே நில்லாது, வெள்ளையான வருணம் தனியே போகாது. ஆகையால், சிவப்பையுடைய குதிரை நிற்கின்றதென்றும், வெள்ளையையுடைய பசு போகின்றதென்றுங் கொள்ளவேண்டியது. அப்படிப்போல் (தத்) பதம் முக்கிய உபாதியான சர்வஞ்ஞன். சர்வகாரணன். சர்வேந்திரியாமி. சர்வேஸ்வரன். சர்வசிருஷ்டி. சர்வஸ்திதி. சர்வசம்மாரன். ஆக எழு உபாதி யுடையவனாய் அதற்குச் சாக்ஷியா யிருக்கின்றான் (பரன்.) இது விடாதலக்ஷணை.

இனி சம்சர்க்க வாக்கியமும் வசிஷ்டவாக்கியமுஞ் சொல்லப்பட்ட முக்கியமான ஜீவபர உபாதிதீர்ந்து, லக்ஷியமானதே மென்கிற வாசனு தோஷமாகிய குற்றம், ஜகத்அஜகத்லக்ஷணைக்கு உதாரணமான, அகண்டவாக்கியத்தால் (ஏகத்துவம்) பண்ணப்படும்.

அகண்டவாக்கியமாவது ஸ்வயம் தேவதத்தனென்றது. அந்த தேவதத்தனுகிய ஒருபுருடனுடன் நாம் சிறிதுநாள் கூடியிருந்தோம்.

அவன் சிறுது நாளைக்குப்பின் பிரிந்து போயினன். அநேக நாள் சென்றபின் சதுரங்கசேனை பரிவாரத்துடன் அவனை மதுரைமாநகரத்தில் அந்திக்காலையில் இராஜாவா யிருக்கக்கண்டோம். அவ்விடத்தில் அவனுடன் சிறிதுநாள் கூடியிருந்து. பிறகு அவன் நம்மைப் பிரிந்துப் போயினன். போயின சிலகாலத்திற்குப்பின், அவன் தண்ட கமண்டலத்துடன் சிதம்பரத்தில் விடியற்காலத்தில் சந்நியாசியா யிருக்கக்கண்டோம். அப்போது அவன் தேவதத்தனோ அல்லனோ வென்று சந்தேகிக்கையில் அவன் காலிலும், மார்பிலும், சிரசிலும் முன்னே மறுவுகண்ட அந்த அடையாளம் அவ்வவ்விடத்திலிருக்கையில் முதல் நாம் கண்ட அந்த தேவதத்தனே இந்த தேவதத்தனாயிருக்கவேண்டுமென்று குறிப்பிக்கப்பட்டது. அவனை விட்ட அந்த இரண்டுவிடமும் இரண்டுகாலமும், அங்கு விட்டுப்போகவிடாமல் நின்றவனே அந்தஒரு தேவதத்தன். அவனைப்போல் இந்த (தோம்பதம்) ஆகிய கிஞ்சித்துவ ஜீவஉபாதிக்கும், (தத்பதமாகிய) சர்வஞ்ஞத்வ (பர) உபாதிக்குஞ் சாக்ஷியாயிருக்கின்றவன் ஒருவனே. இந்தஒருவனுக்கும் விட்டுப்போன (தோம்பத) வாச்சிய உபாதியென்னும் காரிய உபாதியேழும் (தத்பத) வாச்சிய உபாதி யென்னும் காரண உபாதி ஏழும் அவை விட்டுப் போகாநின்றவன் ஒருவனே. இப்படி இரண்டுபாதியும்போக, இரண்டு பதத்திலும் நின்ற லக்ஷியமான அந்தக்கரண சாக்ஷியான ஜீவனே பிரபஞ்ச சாக்ஷியான பரனென்றும் அந்தப் பரனே ஜீவனென்றும் ஏகமாய்க்காண்பது (அசிபதம்.) இது விட்டுவிடாத லக்ஷணை ஆனதால் நீயே பிரம்ம மானாயென்று ஆசாரியன் உபதேசிக்குஞ், (தத்வமசி) என்கிற வாக்கியார்த்தக்கியானமென்று சொல்லப்பட்டது.

IV. இனி நான்காம்வேத வாக்கியத்தில்(அய)மென்கிற பதத்திற்கு அருத்த மேதெனில், (அய) மென்கிற சப்தமானது சமீபத்திலே பிரத்தியக்ஷமா யிருக்கிற வஸ்துவிலே பிரயோகித்தல் செய்கிறபடியால் இந்த ஆத்மா அபரோக்ஷ சொரூபமென்று சொல்ல அதற்கு முந்தி ஆத்மாவென்னு மிடத்தில் தானாயிருக்கிற ஆத்ம பிரகாசத்தை கடபடாதிகள்போல் சுட்டிச்சொன்னால் (திருஸ்ய) பதார்த்தம்போல் காணப்பட்டு ஜடமாய்ப் போமென்ற சங்கைவர, அதற்கு அனாத்மாவாகிய பதார்த்தம்போல் ஜடமல்லவென்று சொல்லப்பட்டது. ஆனால், சொர்க்காதிகள்போல் 'பரோக்ஷமாய் காணப்பட்டாரோவென்றால், அதற்கு சொர்க்காதிகள்போல் ஆத்மா பரோக்ஷமன்று. அவர் நித்தியர் அபரோக்ஷப் பிரகாச சொரூபரானபடியால், அவரை யூகித்து நிர்மலமான அறிவினால் தானாயறியலாகும். இது (அயம்) என்கிற பதத்திற்கு அருத்தம் சொல்லப்பட்டது.

2. (அயம் ஆத்மா) வென்கிறது இனி (ஆத்ம) பதத்திற்கு அருத்தமேதெனில், அகங்காரமுதல் தூலதேகமந்தமாயிருக்கும், காரிய காரண சமவாதத்திற்கெல்லாம் அதிஷ்டானமாய் இருதய கமலத்தில் நானென்கின்ற அபிமானித்துக்கொண்டிருக்கிற அறிவாகிய பிரத்தியேகாத்மாவென்று, ஆத்மபதத்திற்கு அருத்தம் சொல்லப்பட்டது.

3. இனி (பிரம்ம) பதத்திற்கு அருத்தமெப்படியெனில் வேதத்தையும்பிரம்மமென்கிறது, பிரம்மாவையும் பிரம்மமென்கிறது. பிராமணனையும் பிரம்மமென்கிறது. நிர்க்குண பிரம்மத்தையும் பிரம்மமென்கிறது. இதில் திருஸ்யமாய்க்காணப்பட்ட மாயாகுணகாரியமான முதல்மூன்றுக்கும், பிரம்மத்துவஞ்சொலலக்கூடாது. பின் யாருக்கு பிரம்மத்துவம் சொல்லுகிறதென்றால், திருக்குனால் காணப்படுகிற ஆகாச முதலாகிய பிரபஞ்சத்திற்கு சாக்ஷியாயும், பிரகிருதி குணத்திரய சுபாவம் பொருந்தாதவராயும், சர்வாதிஷ்டராயும், சத்தாமாத்திரமாயும் தேச, கால, வஸ்துவினால் பரிச்சேத சூன்யராயிருக்கிற, நிர்க்குணப் பிரம்மத்வம் சொல்லப்படுமென்று சொல்வது. அதனால் ஆத்ம சொரூபத்திற்கு தேச காலவஸ்துவினாற் பரிச்சேத மெப்படி யில்லையெனக்கேட்க ஆசிரியர் சொல்வது:—

3. (a) (பிரம்மமானது) இன்ன தேசத்திலுண்டு இன்னதேசத்தில்லையென்று பிரிவுபடாமல், எல்லாதேசத்திலு மாகாசம்போல் வியாபியாயிருக்கிறபடியால் தேசத்தினாலும் பரிச்சேதமில்லை.

காலத்தினாலெப்படிப் பரிச்சேத மில்லையெனில் ஆகாசத்தைப்போல (பிரம்மம்) இன்னகாலத்தி லுண்டாயிற்றென்றும், இன்னகாலத்தில் லயமாய் விட்டதென்றுஞ் சொல்லப்படாதபடியால், காலத்திரயத்திலும் ஒருபடித்தாய், ஏகநீதியாய் நாசமில்லாத சிதாகாசசொரூபத்திற்கு காலத்தினாலும் பரிச்சேதமில்லை அது வஸ்துவினால் எப்படிப் பரிச்சேதமில்லையென்றால், (பிரம்மமானது) காலபேதத்தை கடந்ததாயும் சஜாதி. விஜாதி, ஸ்வகதபேத, சூன்யமாயும், பிரம்மத்தைத்தவிர இரண்டாவது வஸ்து வில்லாதபடியாலும், நிரந்தர சொரூபமான சைதன்யத்திற்கு வஸ்துவினாலும் பரிச்சேதமில்லை. இப்படித் திரிவிதப் பரிச்சேத சூன்யமாயிருக்கிற பரப்பிரம்மமே, பிரம்மபதத்திற்கு அருத்தம் சொல்லப்பட்டது.

3. (b) இப்படி அந்தச்சச்சிதானந்த பரிபூரண பிரம்மமே அந்தப்பிரத்யேகாத்ம சொரூபராயிருக்கிறது இந்த பிரத்யேகாத்ம சைதன்யமே அகங்காராதிகளுக்கு சாக்ஷியாய் அந்தபிரம்மமாகவேயிருக்கிறதாகையி

வனு அந்தக்கரணத்திற்குள்ளே (அகம்) என்கிறபதம் லக்ஷியார்த்தமாக யிருக்கிற பிரத்தியேகாத்ம சைதன்யமென்று அயமாத்ம பிரம்மமென்கிற வாக்கியார்த்தக்யானம் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி நான்கு மகாவாக்கியங்களும் ஸ்புடமாகத் தாற்பரியத்தைச்சொல்லும். ஆகையாலிதை சற்குரு சந்நிதானத்திலிருந்து விபரீதங்கள் போககேள்விப் படுதலே சிரவண மென்றுசொல்லப்படும்.

3. (c) இப்படி சிரவணஞ்செய்த தாற்பரியத்தை மனதில்தரித்து தன்புத்தியினுல் நன்றாய் ஆலோசனைசெய்து சாஸ்திரயுக்தமாய் வாக்கினுல் பிரசங்கஞ் செய்கிறதே மனனமென்று சொல்லப்படும்.

3. (d) இப்படி ஆலோசனை செய்து நிச்சயப்படுத்திய சொரூபத்தில் எப்போதும் புத்தி விருத்தியை நிறுத்தல்செய்து தயிலதாரை போலிடைவிடாமல் அநுசந்தானஞ் செய்துக் கொண்டிருப்பதே நிதித்தியாசனமென்று சொல்லப்படும்.

3. (e) இப்படி மகாவாக்கியங்களுடைய அருத்தத்தை சிரவண மனன நிதித்தியாசனம் செய்தவர்கள் சகல அஞ்ஞான சந்தேக விபரீதங்கள் நீங்கி சமாதியுக்தமான ஜீவன்முக்தியையடைவர். அப்படிப் பட்ட ஜீவன்முக்தனே கிருதக் கிருத்தியனென்பதும் எல்லாஞ் செய்து முடித்தவனென்பதும் சமஸ்ததேவதைகளாலே வந்திக்கப்படுகிறவனென்பதும், அவனைப்பூசித்தாலும் தரிசித்தாலும் நமஸ்கரித்தாலும் தருமார்த்த காம மோக்ஷ பலன்களை அடைவார்களென்பதும் நூற்றுணிபு. அந்த ஜீவன்முக்தன் பிராப்தகாலத்தில் விதேக கைவல்யமும் பெறுவன். புனர்ஜன்மம் அவனுக்கில்லையென்றும், அவனே திரிமூர்த்திகளுக்கும்மேலாய சர்வோக்கிருஷ்டமாயிருக்கிற நித்தியமுக்த சத்திய பரமாநந்த சொரூபனென்றும் சகல உபநிஷத்துகளும், சகல வேதாந்தசாஸ்திரங்களும் கோஷிக்கின்றன. பிரம்ம நிஷ்டாளர்களும் இப்படியே சொல்லியிருக்கின்றார்கள். அவனுடைய பாதஸ்பரிசத்தினுலே பூமியும்பரிசுத்தமாகின்றது. அவனைப் பெற்றதாயும் கிருதார்த்தியாகின்றாள். அவனுடைய குலமும் பரிசுத்தமாகின்றது யென்று பரம அம்ச பரிவிராசகாசாரியரான ஸ்ரீ சங்கராசாரியசுவாமிகள் நிரூபித்திருக்கின்றார்.

இந்த ரகசியார்த்தத்தை அநுக்கிரகஞ்செய்த சற்குரு மூர்த்தியினுடைய பாதபத்மங்களை சிரசினுலே வந்திக்கின்றனம்.

## மகா வாக்கியார்த்தப் பிரகரண முற்றும்

## சம்பூரணம்.

# மகாவாக்கிய பிரகரணம்.

## இந்நூல் மான்மியம்.

*பொச்சையா முடலங்காட்டி பொறிபுலன் கரணங்காட்டி*
*இச்சையா ருயிருங்காட்டி யெழிற்றிருவருளுங்காட்டி*
*யச்சமின்னிலையுங்காட்டி யகம்புறந்தானுங்காட்டி*
*சச்சிதானந்தங்காட்டிடுஞ் சற்குருநாதன்போற்றி.*

இரவுபகலின்றாலே இதன்பொருளறியா துரைத்தாலுமிம்மைநல்கும்
பரசுகமுண்டாய்ப்பிரமஞானியாய் விடுவனிந்தப்பலன் தப்பாது [ற்கு
திறமுடனிந்நூற்பொருளையறிந்தொருக்காற் கேட்டாலுந்தெருண்டவ
ரமுதவுமெஞ்ஞானியாயதனால் முக்தியிங்கேவருவதாமே.

உலகம்பொய்யென்பதற்கு சாக்ஷியாய் காண்பது: * பிரதிபாசிக சீவன் பிரதிபாசிகமான சகத்தையும், தன்னையும் சொற்பனகாலத்தில், தான்கண்ட காக்ஷிகளை அச்சமயம் உண்மையாகவே எண்ணுகின்றான். அவனே நித்திரைவிட்டெழுந்தபின்பு, அவன் இருந்தவிடத்தே யிருக்க தான் வெவ்வேறான இடங்களிற்போய் வியவகாரியனென் றெண்ணியும், உலகம் எதார்த்தமென நம்புகின்றான். அப்படி விளங் கும் பாரமார்த்திக சீவனானவன் விசாரணையில் முற்கூறிய வைகளெல் லாம் எப்போதும் மயக்கமான கானல்நீர்போலவும் கட்டையிற் கள் ளன்போலவும் பொய்யெனக்கண்டு நிஷ்காமிய பதத்தாற்கிடைத்த ஞானாசாரிய னனுக்கிரகத்தினால் மகாவாக்கியப்பொருளை விசாரித் துணர்ந்து, உலகத்தையும் தன்னையும், பூதபௌதிக வியவகாரிக ளைவற்றையும் பொய்யென்றறிகிறான். ஆகையால், தான்கண்டகன வைப்போல் உலகம்பொய்யென்று கூறுவது சகலவேதாந்த சாஸ் திரங்களின் சித்தாந்தம். இந்தப் பிரகரணத்தை ஸ்ரீ குருமூர்த்தியி னிடத்தில் நன்றாக விசாரித்து ஞானபோதமுணர்ந்த சிஷ்யன் வந் தனைவழிபாடுகள் செய்துகொண்டு சீவன்முத்தனாய்ப் பிரம்மானந்த சொரூபனாய் விளங்குவன். சுபம்.

ஆகையால், தாயுமானவரும் அதைக்கண்டு, "இந்திரஜாலங் கனவு கானல் நீர் என உலகம் எமக்குத் தோற்றிற்று" என்றனர்.

சிங்காதனத்தில்வீற்றிருக்குஞ் சிறப்பாராஜன் கனவடைந்து
பங்காப்புலத்தன்மையை மேவி வருந்துவோன்றன் னனவுணரின்
அங்காஞ்சோகமோகமெலா மந்தக்கணமேநீங்குமதின்
இங்காஞ்சீவத்துவமோகமெலையுந்தனைத்தேர்ந்தக்கணமே.
மேலாஞ்சதுட்டசாதனங்கண்மேவி நிறைந்தபேர்க்குரைக்கின்
மேலா மதுநா மெனத்திடமாய் விளங்கு மலையில்லாதவர்க்கு
மேலாம்பரமன் மான்மழுவாய் விளங்கியுரைத்தும் விளங்காது
மேலாஞ்சாதனங்கள்வர மேவவேண்டுஞ் சாதுசங்கம். (மகாராஜா.)

இங்ஙனம்: சங்கீத வித்தியாசுந்தரி:

**பெங்களூர் - நாகரத்தினம்.**

---

* பிரதிபாசிகனென்பது ஜீவன் நித்திரைவிட்டெழுந்தகாலையில் கனவைப் பொய் யாகக் கண்டது.